# நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார் கோவிலடி.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைப்பு** : நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

**ஆசிரியர்** : **கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

**உரிமை** : பேராசிரியர் அ. சண்முகதாஸ்

**பதிப்பு** : முதற்பதிப்பு 02.09. 2011

**வெளியீடு** : கோகுலம் வெளியீடு - 03

**அச்சிட்டோர்** : கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல. 424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**Title** : **NĀLUM IRANDUM COLLUKKURUTI**

**Author** : Dr.Manonmani Sanmugadas

**Copy Right** : Prof.A.Sanmugadas

**Edition** : First Edition 02.09.2011

**Published by** : KoKulam Publication - 3

**Page** : 160

**Printed by** : Harikanan Printers,
No.424, K.K.S. Road, Jaffna.

Price : 350/-

ISBN : 978-955-98925-4-0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

காலம் கடந்து கொண்டிருக்கிறது. புதியதொரு நூற்றாண்டின் தொடக்கத்தில் மனிதவாழ்வு நடக்கிறது. விஞ்ஞானத்தின் விந்தையும் தொழில்நுட்பத்தின் வேகமும் மனிதனை உருமாற்ற முயலும் வேளையிது. இளமையின் கவனத்தைக் கணினியும் தொலைக்காட்சியும் ஈர்க்கின்றன. கற்றல் செயற்பாட்டின் ஓரங்கமாக அவவை பயன்படுத்தப் படலாம் என்ற அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. எனினும் திசைமாறிய பறைவைகளாக மாணவர் உலகம் அல்லாடிக்கொண்டி ருக்கிறது. இந்த இக்கட்டான நிலையை மாற்ற வழிதேடிப் பெற்றோரும் ஆசிரியரும் குழம்பி நிற்கின்றனர்.

இவற்றுக்கு மேலாகப் பெரியவர்களும் நவீன நாகரிகப் பரம்பலால் மனந்தடுமாறி நிற்கின்றனர். இளமைத்தோற்றத்தை மீண்டும் பெறுவதற்கு முழு முயற்சி செய்யும் முதுமை. அதனால் முரண்பட்டு இளமை, வன்முறை வழிசெல்லச் சமுகத்தின் சமநிலையே ஆட்டம் காணும் நிலையும் ஏற்பட்டுள்ளது. மீண்டும் சமநிலையை ஏற்படுத்த எல்லோருக்கும் ஒருவழிகாட்டடல் தேவைப்படுகிறது. நமது முன்னோர் சொல்லிப்போன வாழ்வியல் நெறிமுறைகளை மீண்டும் ஒருமுறை எண்ணிப்பார்த்து அதன்வழி நாம் சென்றால் என்ற வினா என் உள்ளத்திலே எழுந்தது. அதன் வழியே உருவாகியதே இவ்வாக்கமாகும்.

இளமை முழுமை பெறவும் முதுமை தந்நிலையை உணரவும் சில கருத்துக்கள் இவ்வாக்கத்துள் அடக்கப்பட்டுள்ளன. அறநீதியைப் பாடிய புலவரும் இதனையே இலக்காகக் கொண்டுள்ளனர். நாலடியும் மூதுரையும் குறளும் காட்டும் வாழ்வியல் எம்மையும் வழிநடத்தும். சுயநலமான எமது போக்கிலிருந்து எம்மை மாற்றும். என் மனமும் குழம்பிய வேளையில் தெளிவுபெற அந்த வாழ்வியலை நுணுகிக் கற்றதுண்டு. உறவும் நட்பும் ஒக்கலும் சிக்கலாகும் போது அதுவே வழிகாட்டியது. சிறப்பாகச் சிறுவரை வழிநடத்தப் பெரிதும் உதவிற்று. பாடலின் பொருள் தெளிவாய்ப் புலப்பட உவமைகள் பொருத்தமாக அமைந்திருந்தன. நான் அவற்றைப் படித்தபோது என்மனமும் சீர்மை பெற்றது. தீய நினைப்புகளை ஒழித்து எல்லோருக்கும் பணி செய்யும் குணஇயல்பு தோன்றியது. அதனால் வாழ்க்கை என்பது ஒரு வாழும்முறைமையென்பதை நன்குணரமுடிந்தது. அதனை எல்லோரும் அறியச் செய்ய வேண்டும் என்ற விருப்பு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் இன்புறுவது உலகு இன் புறக்கண்டு
காமுறுவர் கற்று அறிந்தார் (குறள்: 399)

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்விக்கு உலகம் மகிழ்வதைக் கண்ட கற்றறிந்தோர் மேலும் மேலும் அக்கல்வியைக் கற்பர் என வள்ளுவர் கூறிய கூற்றும் என்னை வழிநடத்தியது. எனவே நான் கற்று அதனால் பெற்ற நன்மையைப் பிறர்க்கும் எடுத்துரைக்க எண்ணியபோது வலம்புரி நாளிதழ் கைகொடுத்தது. வாராவாரம் ஒரு பத்தி எழுத்தாக என் கருத்தைப் பொறிக்க இடம் தந்த வலம்புரி காலத்திற்கேற்ற பணிசெய்தது. அதற்கு என் நன்றியை நவில்வதில் பெருமையடைகிறேன்.

மக்களின் வாசிப்புப்பழக்கம் இன்று நாளிதழோடு சுருங்கி விட்டது. அவ்வாசிப்பும் பொதுமக்கள் நிலையிலே மட்டும் நடைபெறுகிறது. எனவே நாளிதழில் சிலகருத்துகளை நற்சிந்தனை வடிவில் கொடுப்பது பயன்தருமென எண்ணினேன். வலம்புரி நாளிதழ் மூலம் "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற தலைப்பில் கருத்துக்களை வாராவாரம் எழுதமுடிந்தது. அவற்றின் தொகுப்பே இந்நூலாக்கமாகும். இக்கருத்துகள் இளை யதலைமுறையினரை ஈர்க்கும் என நம்புகிறேன். குறிப்பாகப் புலம் பெயர்ந்த நாடுகளில் வதியும் தமிழ்ச் சிறார்கள் இத்தொகுப்பிலே எடுத்தாளப்பட்ட பாடல்கள் இணைந்திருப்பதால் விளக்கநிலையிலும் நூல் பெரிதும் வேண்டப்படும். நான்கடிப்பாடல்களிலும், இரண்டடிப்பாடல்களிலும் விளக்கமாகச் சொல்லப்பட்ட கருத்துகளை அவர்கள் ஏனைய கற்றல் கற்பித்தல் நிலையிலும் பயன்படுத்தமுடியும்.

எதிர்காலத்தில் உலகம் முழுவதும் பரந்துவாழும் தமிழரின் இளைய தலைமுறை தமது வாழிடமொழியிலும் எமது தமிழிலக்கியங்களை மொழிபெயர்க்க வேண்டிய தேவை உண்டு. அவ்வேளையில் இத்தொகுப்பு ஒருவிளக்கநூலாகவும் அமையும். எல்லோரையும் இணைக்கும் தொடர்பாடல் மொழியாகத் தமிழ் விளங்கும் நிலையும் உருவாகி வருகிறது. தமிழிலக்கியங்களை மீளக் கற்கும் ஒரு காலம் கண்ணில் தெரிகிறது. அக்காலத்தை வரவேற்கப் பல நூல்கள் வெளிவரவேண்டும். இந்நூலை அழகுற அச்சிட்டு வெளியிட்ட கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் என் நன்றிகளைத் தெரிவிக்க வேண்டியது என் கடனாகும். இந்நூல் வெளிவர அருள்புரிந்த இறைவன் பாதங்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் உரை

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் ஆக்க இலக்கியப் பணியின் மற்றொரு படைப்பான "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்ற சிந்தனைத் தூண்டல் நூலுருப் பெறுகின்றது.

வலம்புரி நாளிதழில் வெளிவந்த "பக்தியின் மொழி தமிழ்" என்ற ஆக்க இலக்கியம் நூலுருப்பெற்றதைத் தொடர்ந்து வலம்புரி நாளிதழில் அவரால் எழுதப்பட்ட நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்பதும் நூலுருப்பெறுவது போற்றுதற்குரியது. அன்றைய நாளுடன் செய்தியின் காத்திரம் இழந்து போகின்றது என்பது நாளிதழ்களின் வழமையான நினைப்பாக இருக்கின்ற வேளையில், நாளிதழ்களை ஆவணப்படுத்துதல் தவறவிட்டவற்றைத் தேடிப் பெறுதல் என்ற ஒரு புதுப் பண்பாட்டைப் புகுத்தி நாளிதழ்களின் இருப்பைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு சமகால நாளிதழ்களுக்கு இருக்கின்ற வேளையில், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் வலம்புரியில் எழுதி வருகின்ற ஆக்க இலக்கியங்கள் மேற்குறிப்பிட்ட பணியை வலம்புரி இலகுவாகச் செய்து முடிக்க உதவுகின்றது எனலாம்.

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர், திறனாய்வாளர், உரையாளர், பிறமொழி அறிவாளர் என்ற பல்பரிமாணங்களில் தனது ஆளுமைத் திறத்தைப் பதித்த கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் சமூகப் பொறுப்பும் உடனுக்குடன் ஆவணப்படுத்தும் உத்வேகமும் காலத்தை அறிவியலுக்காக அர்ப்பணிக்கும் அவரின் உயர்ந்த சிந்தனையும் தமிழினம் தொடர்பில் நாம் பெருமைப்படுவதற்குக் காணரமாகின்றன.

எனவே கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் இலக்கியம் நோக்கிய எழுத்துப் பணி, சமூக, சமயப் பணி, அறிவியல் நோக்கிய சிந்தனைப் பணி என்பன தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வலம்புரியில் அவர் எழுதிய ஆக்கங்கள் நூலுருப் பெறுவதை யிட்டு வலம்புரிக் குடும்பம் அகமகிழ்வதுடன் அவருக்குத் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

**நல்லையா விஜயசுந்தரம்,**
பிரதம ஆசிரியர்,
வலம்புரி நாளிதழ், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| *1)* தலை நிலத்து வைக்கப்படும் | *01* |
| *2)* அறுசுவையுண்டி அமர்ந்த இல்லாள் ஊட்ட | *03* |
| *3)* துன்புற்று வாழ்தல் அரிது | *05* |
| *4)* முன்னிய முடிகவென்று | *07* |
| *5)* விலங்காது வீடு பெறும் | *09* |
| *6)* தொன்மையுடையார் தொடர்பு | *11* |
| *7)* மனந்தீதாம் பக்கம் அரிது | *13* |
| *8)* சகடக்கால் போல வரும் | *15* |
| *9)* மெய்யதாவால் குழைக்கும் நாய் | *17* |
| *10)* பாலொடு அளாய நீர்.. | *19* |
| *11)* சீர்கொண்ட சான்றோர் சினம் | *21* |
| *12)* ஈனர்க்கு உரைத்திடில் இடரதாகுமே | *23* |
| *13)* மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே | *25* |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) பருவத்தால் அன்றிப் பழா 27

15) மறைக்குமாம் கண்டீர் மரம் 29

16) ஒட்டி உறவார் உறவு 31

17) உற்றார் உலகத்தவர் 33

18) பரிவதூஉஞ்சான்றோர் கடன் 35

19) மானம் அழுங்கவரின் 37

20) விளக்கினுள் ஒண்சுடரே போன்று 39

21) கோது போற் போகுமுடம்பு 41

22) காக்கை உகக்கும் பிணம் 43

23) உரைத்தாலும் தோன்றாது உணர்வு 45

24) மடக்கொடி இல்லா மனை 47

25) உண்ணீர்மை வீறும் உயர்ந்து 49

26) தேற்றும் புலவரும் வேறு 51

27) புகற்கரிய பூழை நுழைந்து 53

28) கைப்பறா பேச்சுரையின் காய் 55

29) குறிப்பின் கீழ்ப்பட்ட துலகு 57

30) மனம் வேறு செய்கையும் வேறு 59

31) அற்புதமாம் என்றே அறி 61

32) புல்லிதழ் பூவிற்கும் உண்டு 63

33) தூற்றாதே தூரவிடல் 65

34) பாம்பின் தலைநக்கி அன்னது உடைத்து 67

35) கொடுத்தார் எனப்படும் சொல் 69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36) புற்பனிப் பற்று விட்டாங்கு 71

37) வைததை உள்ளி விடும் 73

38) எய்தியக் கண்ணும் பிறர்க்கு 75

39) கையற்ற போதே அறும் 77

40) மாதர்மேல் வைப்பார் மனம் 79

41) கண்டு கலுழுமே கண் 81

42) மாதர் மனைமாட்சி யாள் 83

43) காண்டற் கரியதோர் காடு 85

44) கொண்டானைக் கொல்லும் படை 87

45) மகனறி தந்தை அறிவு 89

46) பூவின் கிழத்தி புலந்து 91

47) பச்சோலைக்கு இல்லை ஒலி 93

48) எறிபுனந் தீப்பட்டக்கால் 95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

# தலை நிலத்து வைக்கப்படும்

இன்று எம்முடைய எதிர்காலம் பற்றிய ஓர் அச்சம் ஏற்பட்டுள்ளது. நேற்று, இன்று, நாளை எனத் திட்டமிட்டு வாழ்ந்தநிலை ஒன்று முன்னர் இருந்தது. கடந்தகாலச் செயற்பாடுகள் பயனுள்ளவையாக நிறைவேற, நிகழ்காலச் செயற்பாடுகள் இனிதே நகர, வருங்காலம் வளமாய் அமையும் என்ற நம்பிக்கை நிலைத்திருந்தது. இத்தகைய காலங்களின் கணிப்புச் செல்நெறியைப் பயிற்றக் கல்வி துணை நின்றது. கல்வியின் பயன் இம்மைக்கும் மறுமைக்கும் வழித்துணை யாய் வரும் என்பர். எனவே முதலில் அது இம்மையில் எப்படி எம்மை வழிநடத்தும் என்பதை நாலடியில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்த முன்னோர் கூற்றை மீள நினைவூட்டுகிறோம்.

கல்விச் செல்வம் பொருட்செல்வத்தைப் போன்றதல்ல. பொருட்செல்வம் கையில் உள்ளபோது மட்டுமே பயன்படும். ஆனால் கல்வியோ கொடுக்கக்கொடுக்கக் குறையாத செல்வம். பொருளோ கொடுத்தால் குறைவுபடும். கல்விச்செல்வம் கேடு செய்யவிடாது. நல்லது செய்ய ஆற்றுப்படுத்தும். இந்த உலகம் பற்றிய மயக்கத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுபடுத்தும் நல்ல மருந்து கல்வி. அது உடல், உள ஊனங்களைப் போக்கி எல்லோரையும் நலமாக்கும். சிறப்பாக மனத்திலே மயக்கம் ஏற்படும் வேளைகளில் இந்தக் கல்வி என்னும் மருந்து உடனடியாகத் தெளிவை ஏற்படுத்தி மீண்டும் ஊக்கத்தோடு உடலையும் உள்ளத்தையும் இயங்க வைக்கும்.

மனிதனுக்கு உறுதுணையாக நிற்கும் கல்வியைக் கொடுப்பது மிகச் சிறந்த கொடையாகும். சிறிய உயிர்கள் என்றும் எடுத்துச் செல்லக்கூடிய பாரமற்ற நிலையான கொடையும் இதுவே. கற்றவர் தம்மை அழகு செய்ய வேண்டிய அவசியமே இல்லை. வேறு அணிகலன்கள் அணியாமல் "கல்வி" என்னும் அணிகலன் பூண்டு வலம் வருவதே பெருஞ்சிறப்பாகும். எழுத்தின் வனப்பே உண்மையான வனப்பாகும். இதனால் எண்ணும் எழுத்தும் கண்ணெனப்பட்டன. நெஞ்சத்தில் நல்லவர்களாக, நடுவு நிலையாளராக, சொல் வனப்புடையராக என்றும் உள்ளத்தில் இளமையோடு உலகை வலம் வருவதற்குக் கல்விக்கொடை யைச் செய்வோம். எமது அடுத்த தலைமுறை எம்பெயர் சொல்லி இக்கொடையைத் தொடர இது வழிகாட்டும். கல்வியின் சிறப்பு எம்முடைய இன்றைய வாழ்வியலில் நன்கு உணரப்பட வேண்டும். நாலடியார் இக்கருத்தை நாளாந்த நடைமுறையால் எளிமையாக எடுத்து விளக்கியதை மனங்கொளத் தருகிறோம்.

"களர் நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளை நிலத்து நெல்லின் விழுமிதாகக் கொள்வர்
கடை நிலத்தோர் ஆயினுங் கற்றறிந்தோரை
தலைநிலத்து வைக்கப்படும்."

(நாலடியார்:133)

**வலம்புரி 26.01.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

## அறுசுவையுண்டி அமர்ந்த இல்லாள் ஊட்ட

உலகத்தில் வாழும் உயிர்களெல்லாம் உணவு உண்ணும் நாளாந்தக் கடமையைத் தமக்குரிய நிலைக்கேற்றவாறு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. பகுத்தறிவு பெற்ற மனிதனுடைய வாழ்க்கையில் உணவுப்பழக்கம் செம்மை யானதொரு செயற்பாடாக இருந்ததை நம்முன்னோரது இலக்கியப் பதிவுகளால் அறியமுடிகிறது. இயற்கையோடு இணைந்து நிலத்தைப் பண்படுத்திப் பயன் அடைந்த மக்கள் நிலத்துப்பெறும் விளைபொருட்களின் சுவைகளை நன்கறிந்திருந்தனர். அதனால் தமிழர் வாழ்வியலில் உணவு உண்பது என்பது திட்டமிடப்பட்ட செயற்பாடாக இருந்த தையும் பலபாடல்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அவற்றின் மூலம் உணவின் சுவை அறுவகையாகப் பகுத்து அறியப்பட்டி ருந்ததையும் உணரமுடிகிறது. "அறுசுவை உண்டி" என்ற சிறப்புத் தொடரின் பயன்பாடும் இதற்குச் சான்றாக உள்ளது.

"உணவூட்டல்" என்னும் செயற்பாட்டைப் பெண்களே பொறுப்பேற்று எல்லோருடைய உடல்நலத்திற்கும் ஏற்ப தொழிற்பட்டு வந்தனர். ஆணும் பெண்ணும் திருமணம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இணையும்போது ஒரு சடங்காக உணவூட்டல் முன்னர் நடைபெற்றது. "சோறுகுடுப்பித்தல்" என்ற தொடரின் பயன்பாடு கிராமப்புறங்களில் இன்னமும் இதற்குச் சான்றாகப் பேச்சுவழக்கிற் பயன்படுத்தப்படுகிறது. "இல்லாள்" என்ற தகுதிப்பாடு பெற்ற பெண்ணின் "உணவூட்டல்" தாய் என்ற தனித்துவ நிலையில் தொடர்ந்தது. பாட்டி என்ற நிலையில் பட்டறிவாய் உயர்ந்து நின்றது. ஆனால் இந்தச் செயற்பாட்டிற்குரிய செல்வத்தைப் பற்றிய கவனம் தேவை என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும்.

நம்முடைய உண்ணும் செயற்பாட்டில் முன்னோரின் பட்டறிவைப் பின்பற்ற வேண்டும். மனையாளுடைய கையினால் அறுசுவை உண்டி பெறும் செல்வரும் எதையும் புறந்தள்ளாது உணவை வீணாக்காமல் உண்ணவேண்டும். கைத்தல், புளித்தல், உறைத்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல் என அறுசுவை உணவுகளையும் உண்டுமுடித்த பின்னர் மேலதிகமாக வேறு பண்டங்களை உண்ணும் செல்வரும் ஊதாரித்தனத்தால் செல்வத்தைத் தொலைக்க நேரிடும். அப்போது வறியராகி ஓரிடத்துச் சென்று கூழை இரந்து உண்ணும் நிலையும் ஏற்படலாம். இதனை நாம் மனங்கொள்ள வேண்டும். இன்றைய வாழ்வியலில் உணவை வீணாக்கும் உணவூட்டல் பழக்கம் தோன்றியுள்ளது. இது எம்மை வறுமையில் ஆழ்த்திவிடும். எனவே நாலடியை நினைத்து நாளும் செயற்படுவோம்.

"அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - வறியராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று."

(நாலடியார்: 1)

**வலம்புரி 02.02.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

## துன்புற்று வாழ்தல் அரிது

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. அதிலும் மனித வாழ்க்கை இன்பமாக வாழ்வதற்கு ஏற்றதொரு இனிய அநுபவமாகும். ஏனைய உயிரினங்களை விட மனிதனுக்குச் சிறப்பான தகுதியொன்றுண்டு. அதுவே பகுத்தறிவாகும். நல்லதையும் கெட்டதையும் பகுத்து அறியும் ஆற்றல் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பான ஆற்றலைப் பயன்படுத்தி மனிதன் இன்பமாக வாழமுடியும். மனிதவாழ்வு அவலமானது என எண்ணிக் கவலைப்படும் வேளையில் அந்தக் கவலையைப் போக்கும் மருந்தும் எம் கையில் உண்டென்பதை நாம் மறந்து விடக்கூடாது. எமக்குக் கல்வியூட்டும் பெற்றோரும் ஆசிரியரும் இம்மருந்தை அறிந்தவர்கள். எமது நலத்திலே மிகுந்த அக்கறை கொண்டவர்கள். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை எம்மை வழி நடத்துகிறது.

எமது மூத்தோர் அறிய வேண்டியவற்றைத் தமது முன்னோரிடம் அறிந்திருந்தனர். அஞ்ச வேண்டியவற்றை நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் தம்மைச் சார்ந்தவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழச் செய்வதையே வாழ்க்கையின் இலக்காகக் கொண்டு வாழ்ந்தனர். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற எண்ணத்தோடு செயற்படுவது இனிய வாழ்வின் இயல்பாகும். மற்றவர் மனமறிந்து வேண்டிய உதவி செய்து வாழும் வாழ்க்கையில் துன்பத்திற்கு இடமில்லை. அறிவுள்ளவர் எதிர்கால நிகழ்வுகளை முன்னரே அறியும் ஆற்றல் பெற்றவர்.பொறுமையாக இருந்து செயற்படும் போது புலன்களைக் கட்டுப்படுத்த முடியும். வாழ்க்கையின் இனிய செல்நெறியை மாற்றும் காமம், வெகுளி என்னும் இரு உணர்வுகளையும் அடக்கி வாழ்பவர் வாழ்க்கையின் வெற்றியை அறிந்தவர். பாவங்களுக்கு அஞ்சி அறஞ்செய்து வாழ நினைப்பவர் இன்பமாக வாழும் இயல்புடையவராவர். "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற பழமொழி எமது துன்பத்தை உடனடியாக நீக்கும் நன்மருந்தாகும். உள்ளத்தைப் பக்குவப்படுத்தப் பொறுமைதான் கைகொடுக்கும். எம்மைத் தீயவழியிலே செல்லத்தூண்டும் கடிவாளம் அற்ற குதிரை போன்ற புலன்களைக் கட்டுப்படுத்தத் துணை நிற்கும். எனவே, பொறுமை என்னும் குணநலத்தை மனிதன் அணிகலனாகக் கொண்டு வாழுவதே இன்பமான வாழ்க்கைக்கு ஏற்ற வழியாகும். இவ்வழிச் சென்ற எமது முன்னோர் பலரையும் நாம் நினைவு கூர நாலடியார் பாடலாகப் பதிவாக எம்மிடம் இன்றும் உள்ளது.

"அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகு உவப்பச் செய்து - பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது."

(நாலடியார்:74)

**வலம்புரி 09.02.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

## முன்னிய முடிகவென்று

மனிதனுடைய நாளாந்தக் கடமைகளில் தலையாயது வழிபாடாகும். தனக்கு முன்னே வாழ்ந்தவர்களுடைய வாழ்வியலின் நெறியிற் செல்லுவதே மனிதனை மகிழ்வூட்டும். எமது வாழ்க்கைச் செல்நெறியில் இடையிலே தோன்றும் ஊறுகளை நீக்குவதற்கு முன்னோர் நல்லதொரு வழியைக் காட்டியுள்ளனர். இயற்கை நிலையில் தோன்றும் வானவில்லின் வரவை எவரும் அறியமுடியாது. அதை முன்கூட்டியே உணரவும் வாய்ப்பில்லை. இது போலவே எமது வாழ்விலும் சில இடையூறுகள் முன்கூட்டியே அறிய முடியாமல் திடீரென ஏற்படும். அதனால் வாழ்க்கையே துன்பமாகத் தெரியும். இந்த இடையூறை நீக்குவதற்கு ஒரு நல்ல வழியை நம்முன்னோர் காட்டி எம்மை வழிப்படுத்தி யுள்ளனர்.

நமது முன்னோர் ஊர், பேர், உருவம் என்பவற்றை அறியாத ஒரு பேராற்றலைக் "கடவுள்" எனப்பெயரிட்டு வழங்கினர். எல்லாவற்றையும் கடந்து நின்ற அந்தக் கடவுளின் கால்கள் நிலத்தில் படுவதில்லை என உணர்ந்தனர். அந்தக் கால் நிலம் தோயாத கடவுளை, நாம் எமது தலை நிலத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவணங்கினால் எமது உள்ளத்தில் நினைக்கும் செயல்கள் யாவும் நிறைவேறும் என்பதைப் பட்டறிவாற் கண்டு, அதை எமக்கும் கற்பித்தனர். அவர்கள் கற்பித்த நடமுறைகள் இயற்கையோடு ஒட்டிய காலக்கணக்கோடு இணைந்திருந்தன. காலை, இரவு, நாள், வாரம், மாதம், ஆண்டு என எம்மால் முடிந்தவரை வழிபடப் பயிற்றினர். அதற்குச் சிறப்பான பெயர்களையும் வழங்கியிருந்தனர். அப்பெயர் களில் இரவுக்காலத்து வழிபாடென இரு வழிபாடுகள் இன்றுவரை எம்மிடையே நிலைத்துள்ளன. சிவராத்திரி, நவராத்திரி என அவை அழைக்கப்படுகின்றன. சிவராத்திரி சிவனை வழிபடும் இரவாக, விழித்திருந்து செய்யும் வழிபாடாக உள்ளது. ஓரிரவை நான்கு பகுதிகளாக்கி வழிபாடு செய்யும் முறைமையும் வரையறை செய்யப்பட் டுள்ளது.

வழிபாடு செய்வதற்கு எமது ஏனைய கடமைகள் பகல்வேளையில் தடையாக இருக்கலாம். எனவே, எம் வாழ்வில் ஏற்படும் இடையூறுகளைத் தீர்ப்பதற்கு வழிபாட்டுக்கென ஓராண்டில் ஓரிரவை ஒதுக்கி வழிபடும் செயற்பாடு எல்லோருக்கும் நன்மை பயக்கும் வழிபாட்டுப் பயிற்சியாகும். நாம் நினைத்த காரியம் நிறைவேற நிலத்தில் விழுந்து கடவுளை வழிபடுவதே சிறந்தது. இந்த ஆற்றுப்படுத்தலை நம்மவர் எமக்காக விட்டுச்சென்றுள்ளதை நாலடியார் காட்டுகிறது.

"வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை - யாநிலஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்ந்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று."

(நாலடியார்: கடவுள் வாழ்த்து)

**வலம்புரி 16.02.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

## விலங்காது வீடு பெறும்

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இன்று உலகெங்கும் தம் ஆற்றலைப் பறைசாற்றி வருகின்றன. கணினியின் கருவிக்கையாட்சியால் தகவல் பரிமாற்றமும் விரைவு படுத்தப்பட்டுள்ளது. மக்களிடையே விரைவான தொடர் பாடல் நடைபெறும் வினைத்திறன் கண்டு வியக்கும் வேளை யிலே ஒரு குறையும் பலர் உள்ளத்தில் உறைந்து கிடப்பதையும் உணரமுடிகின்றது. மனிதனைப் பற்றி மனிதனே சிந்திக்கும் பண்புநலன் கெட்டுவிட்டது. தான் இயக்கும் கருவிகளில் முழுமையான நம்பிகையை வைத்து மனிதனின் வாழ்வு நடக்கிறது. உலகநாடுகளின் தொழில்நுட்பவளர்ச்சியும் மனிதனின் செயற்பாடுகளைக் கருவிக் கையாட்சியினால் கட்டுப்படுத்தும் முறைமையைத் தோற்றுவித்துள்ளது. இந்நிலையில் மனிதன் வாழ்க்கையிற் சமநிலை இன்றி ஏற்றத் தாழ்வான நிலை ஒன்றும் உருவாகியுள்ளது. உள்ளவன், இல்லாதவன் என்ற ஒரு கூர்மையான வேறுபாடு தோன்றி மக்களிடையே முரண்பாடுகளும் சிக்கல்களும் ஏற்பட் டுள்ளன. இதனால் இத்தகைய வேறுபட்ட நிலையைத் தெளிவுபடுத்தவேண்டிய கடமை கற்றவரைச் சார்ந்ததா கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வாழ்வியலில் இத்தகைய வேறுபட்ட உணர்வுகள் தோன்றியபோதெல்லாம் கற்றவர் மக்களை நன்னெறிப்படுத்தப் பல பாடல்களை இயற்றி வழிப்படுத்தி யுள்ளனர். மனிதன் தன்னைத்தானே செம்மைப்படுத்திக் கொள்ள நல்லறிவூட்டியுள்ளனர். மனிதனின் உடல் ஒரு செயற்பாட்டுக் கருவியாகவே தொழிற்படுவதை நினைவூட்டி ஆற்றுப்படுத்தியுள்ளனர். மனித உள்ளம், தன் உடல் என்னும் செயற்பாட்டுக் கருவியைத் திறம்பட இயகுவதற்கு இலகுவான வழியுண்டு. உடம்பு, வாய், கண், மூக்கு, செவி என வழங்கப்படும் ஐந்து உறுப்புக்களையும் சிறப்பாக நெறிப்படுத்தினாற் எல்லாச் செயற்பாடுகளும் சிறப்பாக அமையும். உள்ளத்தில் இந்த ஐந்து செயற்பாட்டுக் கருவிகளாலும் வேட்கை தோன்றும்போது அதனை ஒழுக்க நெறியால் கலங்காது காக்கும் திறனுடைய அறிவு இன்றியமையாதது. அறிவு என்னும் வலியால் அனைத்தையும் சீராகச் செயற்படுத்தமுடியும். ஐம்பொறிகளும் ஒன்றோ டொன்று இயைபுபட்டுச் செயற்படும்போது மனிதன் ஒழுங்கான வாழ்வை மேற்கொள்ள முடியும். தனது செயற்பாட்டுக் கருவிகள் மற்றவர்களுக்கும் நன்மை பயக்கவே தனக்கு வழங்கப்பட்டிருப்பதையும் உணர முடியும். இதனால் மனிதனே உலகில் முதலில் உணரப்பட்ட கணினியென்பதை நம்முன்னோர் கண்டதை நாலடியார் எடுத்தியம்புகிறது.

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக் - கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்."

**வலம்புரி 23.02.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

# தொன்மையுடையார் தொடர்பு

நட்பு மனிதனுக்கு நன்மை தரும் தொடர்பாகும். குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை நட்பு இன்றியமையாதது. வாழ்க்கையில் உள்ளத்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஒருவரை நாடுவது மனித இயல்பாக உள்ளது. ஒருவருடன் நாம் கொள்ளும் தொடர்பு நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டும். அத்தகைய தொடர்பை நன்கு ஆராய்ந்து ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சான்றோர் எண்ணினர். இயற்கையின் தோற்றநிலை யிலே நாம் கொள்ளும் நட்புறவை நன்கு விளக்கி யுள்ளனர். ஒருவருடன் நட்புக்கொள்ளும்போது அவருடைய குண வியல்புகளுக்கு ஏற்ப அந்த நட்பும் நிலைபெற்றிருப்பதை நாம் உணரமுடியும்.

எந்த ஒரு தொடர்பிலும் கடை, இடை, தலை என மூன்று நிலைகளை நாம் உணர வழியுண்டு. உத்தமம், மத்திமம், அதமம் என்றும் இதனைக் கூறுவர். நட்புநிலையிலும் கடையாயார், இடையாயார், தலையாயார் என முத்திறத்தாரை நாம் உணரமுடியும். இத்கையவரை இனங்காண நமது சூழலில் உள்ள மூன்று மரங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிநிலையையும், பயன்தரும் பண்புநிலையையும் சான்றோர் எடுத்துக் காட்டியுள்ளனர். கமுக மரம் ஒரு தழும்புபட்டால் அது விழுந்து போகுமளவும் அத்தழும்பு இருக்கும். கடையாய நட்பு வகைப்பட்டோரும் நாம் ஒரு குற்றம் செய்தால் அதனைச் சாகும்வரை மறக்கமாட்டார்கள். கமுகமரத்திற்கு நாள்தோறும் நீரிறைக்க வேண்டும். தென்னை மரத்திற்குத் தலையாலே நீரைச் சுமந்து அதன் அடியிலே வார்க்க அது பின்தன் தலையாலே இளநீராக அதைத்தரும். அதுபோல இடையாய நட்பு முன்பு நன்மை செய்தால் பின்பு எமக்கு நன்மை தரும். பனைமரம் ஒரு நாள் விதையிட்டால் பின்னர் பாதுகாக்க வேண்டியதில்லை. அது நீண்ட காலம் நின்று எமக்குப் பயன்தரும். அறிவும் ஒழுக்கமும் பெருமையும் முயற்சியும் ஒழியாமல் தொன்று தொட்டு வரும் நட்பே தலையாயது. எனவே பழைமையுடையார் தொடர்பே நன்று . சான்றோர் தமது பட்டறிவால் நட்பை இவ்வாறு வகைப்படுத்தியுள்ளமை இன்று பெரிதும் எமக்கு உதவும் அரிய வழிகாட்டலாகும்.

நாம் வாழும் நிலையில் ஆராய்ந்து கொள்ளும் நட்புநிலையைச் சூழலோடு பொருத்திக்காட்டும் முறைமை எக்காலத்திற்கும் பொருந்திநிற்பதாகும். அத்துடன் இயற்கையுடன் எம்வாழ்வியலும் ஒன்றுபட்டு நிற்பதை இன்றும் நாம் உணரும் வகையில் இலக்கியப் பாடலாக நாலடியில் தந்திருப்பதும் நயத்தற்குரியது.

"கடையாயர் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயர் தெங்கின் அனையர் - தலையாயர்
எண்ணரும் பெண்ணை போன்(று) இட்ட ஞான்றிட்டதே
தொன்மையுடையார் தொடர்பு."

(நாலடியார்:216)

**வலம்புரி 02.03.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

## மனந்தீதாம் பக்கம் அரிது

இயற்கைக் காட்சிகள் மனிதனுக்கு மகிழ்வு தருபவை. செவ்வானத்த வனப்பும் நீலக்கடலின் பரப்பும் பச்சை மரங்களும் பார்க்கும்போது எமக்குப் பரவசம் தருபவை. அதனால் பல கவிஞர்கள் இயற்கையின் இனிய கோலங் களைப் பாடியுள்ளனர். உள்ளத்தைப் பரவசப்படுத்தும் காட்சிகளினூடாக எம்மையும் வழிநடத்தும் இலக்கும் கவிஞரிடையே இருந்தது. நாள்தோறும் நாம் காணும் இயற்கைக் காட்சியினூடாகப் பெறும் பட்டறிவு நமது வாழ்க்கைக்கும் பயன்படும் வகையினை உணர்த்தியுள்ளனர்.

முற்றத்திற் படர்ந்து நிற்கும் வேப்பமரக்கிளைகளுக் கிடையே வாழைக்குலையொன்று தெரிகிறது. கசப்பான வேப்பிலைகள் அந்தவாழைக்குலையைத் தொட்டுத்தழுவி நிற்கின்றன. வாழை, குலை ஈன்றால் அது பழுத்துக்கனியாக ஏறக்குறைய ஆறுமாதங்களாகும். இனிமையான வாழையின் கனிமேல் தழுவி நிற்கும் கசப்பான வேப்பிலை ஆறுமாத காலமும் சேர்ந்திருப்பதாற் கனியையும் கசப்பாக்கிவிடுமோ என்ற ஐயம் தோன்றுவதியல்பே. ஆனால் இயற்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டில் அத்தகைய மாற்றம் ஏற்படுவதில்லை. வேப்பிலைகளால் தழுவி நின்ற வாழைக்குலையைப் பழுத்தவுடன் இறக்கிப் பதமாகப் பழுத்தவுடன் உண்ணும்போது ஒருண்மை புலப்படுகிறது. வேப்பிலைகளின் கசப்பு வாழைக்கனியின் இனிப்பை மாற்றிவிடவில்லை. இந்த இயற்கைநிலையை அறிவாகிய மனத்திடம் உடையவரிடம் நன்கு காணலாம்.

வேப்பிலையின் கண்ணே கனிந்ததாயினும் வாழைக் கனியின் தீஞ்சுவை ஒருபோதும் வேறுபடாது. அதுபோல தம்மைச் சார்ந்தவர்கள் தீய குணஇயல்புடையவராக இருந்தபோதும் அறிவுடையவர் மனம் திரிபடையாது. அது இனிய குண இயல்புடையதாகவே இருக்கும். பண்புடையவருடைய குண இயல்பு, அறிவால் நிலைபெறும் தன்மையை ஒரு இயற்கை நிலையால் தெளிவுபெறச் செய்த சான்றோரது பணி காலமறிந்த நற்பணியென்பதை இன்று நாம் உணரமுடிகிறது. வாழைக்குலையை வெட்டி அது நன்கு கனிவதற்காக வேப்பிலையால் மூடிவைக்கும் நடைமுறை இன்றும் உண்டு. நம்முன்னோர் வாழ்வியலில் இயற்கையின் இணைவு எப்படியிருந்தது என்பதையும், அது எமக்கு எவ்வாறு பயன்படும் என்பதையும் நாலடிகள் நன்கு விளக்கியுள்ளன.

"வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம் - ஆங்கே
இனந்தீ (து) எனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது."

(நாலடியார் : 245)

**வலம்புரி 09.03.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

## சகடக்கால் போல வரும்

மனிதனுடைய மகிழ்ச்சிக்குத் துணையாக இருப்பவற்றுள் செல்வம் முதன்மை பெற்றதாகக் கருதப்படுகிறது. அதைத் தேடுவதிலேயே வாழ்க்கையின் பெரும்பகுதியும் செலவழிகிறது. பொருள் தேட்டம் மனித வாழ்க்கையில் இன்றியமையாததே. ஆனால் செல்வம் எம்மோடு என்றும் நிலைத்து நிற்காது. தன் முயற்சியால் தேடும் செல்வம் அறவழியில் பயன்படுத்தப்பட வேண்டும். இல்லறம் செய்வதற்கு இன்றியமையாதது செல்வம். தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் பேணும் இல்வாழ்வான் செல்வம் பற்றி நன்குணரவேண்டும். முன்னோர்கள் தமது வாழ்வியல் பட்டறிவுமூலம் அதை உணர்த்திச் சென்றுள்ளனர். இன்று அது எம்மையும் சிந்திக்க வைக்கும்.

செல்வத்தைத் தேடும் முயற்சிகளில் உழுதுண்டு வாழ்வதே வாழ்க்கை என வள்ளுவர் சிறப்பித்துச் சொன்னார். "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்ற முதுமொழியும் வழக்கிலிருந்தது. தொழில்களில் மிக உயர்ந்த தொழிலாகக் கருதப்பட்ட நிலவேளாண்மை இயற்கையோடு ஒட்டி, பருவங்களின் மாற்றத்தோடு இயைபுபட்டிருந்தது. கீழைத்தேசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டின் அடித்தளமாக அமைந்து "அரிசிப்பண்பாடு" என மேலை நாட்டவரால் ஆய்வுக்குட்பட்டுள்ளது.

பயிர்த்தொழில் செய்து தேடும் செல்வம் பலருக்கு வாழ்வு தரும். பலரோடு இணைந்து செய்யும் இத்தொழில் சில விலங்குகளையும் பறவைகளையும் மனிதன் தன்னோடு சேர்த்துக் கொள்ள வாய்ப்பளித்தது. அதனால் இத்தொழில் மூலம் பெறும் செல்வம் பலரோடு கூடி உண்ணும் பழக்கத்தை யும் தந்தது. இது பின்னர் வழக்கம் ஆகி "விருந்தோம்பல்" என்னும் பண்பாக, தமிழர் மரபாகப் பேணப்பட்டது.

இன்று பல்வேறுபட்ட தொழில்கள் செய்து செல்வத்தைத் தேடும் முயற்சி நடைபெறுகிறது. அன்று எம்முன்னோர் சிறப்பாகப் போற்றிய உழவுத்தொழிலை இன்று மதிப்பவர் சிலரே. "மாத ஊதியம்" பெறும் தொழில் களே மதிப்புப் பெற்றுள்ளன. இதனால் மனிதவாழ்வியலும் மாத ஊதியத்திற்கு ஏற்பவே திட்டமிடப்படுகிறது. சூழல் மாற்றங்களால் இத்தொழில்கள் பாதிக்கப்படுவதும் மனிதனை மாற்றிவிடுகின்றது. தான் பெறும் ஊதியத்தைப் பலரோடு பகிர்ந்துண்ணும் நடைமுறையை விடுத்துத் தன்னலம் பேணும் சுயநலவாதியாக மாறிவிட்டான். அவனை மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்ப ஒரு வழிகாட்டல் தேவை. அதை அன்றே நம்முன்னோர் எவ்வாறு உணர்ந்தனர், என வியக்க வைக்கிறது நாலடியார். அது முக்காலமும் அறிந்த வழிகாட்டல் என்பதில் ஐயமில்லை.

"துகள்தீர் பெரும் செல்வம் தோன்றியக் கால் தொட்டுப்
பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க
அகடுற யார் மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்."

(நாலடியார்: 2)

**வலம்புரி 16.03.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

# மெய்யதாவால் குழைக்கும் நாய்

உலகத்தில் வாழும் உயிர்கள் எல்லாம் தனிமையைத் தீர்க்க ஒரு நட்புறவைத் தேடும் இயல்புடையவை. மனிதன் நட்பை ஆராய்ந்து உறவு கொள்வதே சாலவும் நன்று. மனித வாழ்க்கையில் விலங்குகளும் நட்பாக அமையும் தன்மை உண்டு. இந்தநிலையை ஊன்றிக் கவனித்த நம்முன்னோர் நட்புப்பற்றிய சில வழிகாட்டலைச் செய்துள்ளனர். ஒருவருக்குத் துன்பம் நேரும் போது நட்பு அதனை நீக்கும் பண்புடையது. வள்ளுவர் இதனை "இடுக்கண் களைவதே நட்பு" என்று விளக்கியுள்ளார்.

நாலடியார் நட்புப்பற்றிய கருத்தை மனித வாழ்வியலில் இணைத்து விளக்கும்போது நல்லதொரு உவமைமூலம் விளக்குகிறது. இரண்டு விலங்குகளின் தொடர்பையும் குணத்தையும் எடுத்துக்காட்டி மனிதன் எவ்வாறு நட்புக்கொள்ள வேண்டுமென வழி சொல்கிறது. யானையும் நாயும் மனிதனோடு தொடர்புற்று வாழும் விலங்குகள். ஆனால் இரண்டின் தொடர்பு நிலையும் குணமும் வேறுபட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை தனக்கு ஏற்ற உணவுகளைக் கொடுத்து வளர்க்கும் பாகனை நன்றாக அறிந்திருந்தும் ஒரு வேளையிலே கொன்றுவிடும். ஆனால் நாயோ தன்னை வளர்த்தவன் சூட்டுகோலால் துன்புறுத்தினாலும் தனது வாலை ஆட்டி அவனருகே சென்று நிற்கும். இதனைபோன்று மனிதன் நட்புக்கொள்ளும்போது குடி, குலத்தின் உயர்ச்சியை நோக்காது ஒருவருடைய மனத்தூய்மையை ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும். யானை போல உயர்ச்சியுடைய வருடைய நட்பு தீமையானது. மனிதனை அழிக்கும் தன்மையானது. நாய் போலச் சிறியவரானாலும் நாம் செய்யும் துன்பங்களைப் பொறுக்கும் குணமுடையார் நட்பே நன்மையானது. நட்பு மனிதவாழ்வுக்கு இன்றியமையாதது. அந்த நட்பு கேண்மையாக நிலைபெறவேண்டும். வெளிப் படையான நட்புநிலை கொண்டவரை விலக்குவதே நல்லது. கேண்மையுடையாரோடு என்றும் தொடர்புற்று வாழ்வதே நன்று. நட்பு, கேண்மை என்ற இரு சொற்களின் பொருளை இரண்டு விலங்குகளின் குண இயல்பால் முன்னோர் விளக்கியிருப்பது இன்று எமக்குத் தெளிவு தருகிறது. அதை நினைவிற் கொள்வது பயனுடைத்து.

**"யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்**
**கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் - யானை**
**அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்**
**மெய்யதா வால் குழைக்கும் நாய்"**

**(நாலடியார்: 213)**

**வலம்புரி 23.03.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## பாலொடு அளாய நீர்..

"மக்கள் கூடி வாழ்வது கோடி இன்பம் தரும்" என்பது எமது மூத்தோரின் நம்பிக்கையாகும். நல்லவர்களோடு சேர்ந்து பழகுவதால் ஏற்படும் நன்மையைப் பற்றி நாம் நன்குணர வேண்டும் என அவர்கள் விரும்பினர். அதற்கெனச் சிறப்பாக எம்மை வழிப்படுத்தப் பல பாடல்களைப் புலமைச் சான்றோர் பாடியுள்ளனர். எளிய மொழி நடையிற் சிறிய பாடல் வடிவில் மக்கள் மனதிற் பதியவைக்க எண்ணிப் பாடினர். அப்பாடல்களை இன்று படிக்கும்போது ஒருண்மை புலப்படுகின்றது.

இன்று "கல்வி கற்றல்" என்னும் செயற்பாடு "தேர்வு" என்ற இலக்கையே நோக்காகக் கொண்டுள்ளது. மேலைத் தேயக் கல்வி முறைகளைப் பின்பற்றி, சிறந்த உத்தியோகம் பெறும் இலக்கோடு கல்வி கற்பிக்கப்படுகிறது. "வாழக்கல்" என்ற முன்னோரின் அறிவுரையை யாரும் நினைப்பதில்லை. ஏட்டுக்கல்வியால் எல்லா நலங்களையும் பெற்றுவிடலாம் என்ற எண்ணமே நிலைபெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இன்றைய மக்களின் வாழ்வியல் கற்றபடிஒழுக முடியாத நிலையிலுள்ளது. மனிதனின் கல்வியில் "வழிப்படுத்தும்" பண்புநலன் குறைந்தமையே இதற்குக் காரணமாகும். நல்லவருடைய தொடர்பு ஒருவன் குணஇயல்புகளைப் பண்படுத்தும். குறிப்பாக இளமைக் காலத்தில் ஒருவன் நல்ல குணநலங்களையுடைய பெருமை யான பெரியாரைச் சார்ந்து ஒழுகிவரின் நல்லவனாக உருவாகிவிடுவான். அவனுடைய சிறுமைக் குணங்கள் எல்லாம் மறைந்துவிடும். இந்த மாற்றத்தை உணர்வதற்கு ஓர் உவமையை நாலடியார் எடுத்துக் காட்டியுள்ளது.

பாலோடு கலந்த நீர் பாலாகவே தோன்றும். நீரின் நிறத்தைக் காட்டாது. அதுபோல சிறுமைக்குணமுள்ளவர்கள் பெருமைக் குணமுள்ள பெரியரைச் சார்ந்து நிற்கும்போது அவர்களுடைய சிறுமைக்குணம் மறைந்துவிடும். நல்லினம் சேர்ந்து வாழ்வதால் ஏற்படும் நன்மையை பாலோடு அளாயநீருடன் ஒப்பிட்டுக் காட்டும் பாங்கு எல்லோருக்கும் நல்ல விளக்கத்தைத் தந்து நிற்கிறது. கரைசல்களின் கலப்பையும் மாற்றத்தையும் கண்டு வியக்கும் விஞ்ஞான உலகம் இச்செய்தியையும் அறியவேண்டும்.

"பாலோடு அளாயநீர் பாலாகும் அல்லது
நீராய நிறந்திரிந்து தோன்றாதாம் - தேரின்
சிறியார் சிறுமையுந் தோன்றாதாம் - நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து."

(நாலடியார்:177)

**வலம்புரி 30.03.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## சீர்கொண்ட சான்றோர் சினம்

மனிதனுடைய குணவியல்பு அவன் வாழ்க்கைக்கு வழிகாட்டும். ஒருவன் கொண்டிருக்கும் நற்குணங்கள் அவனை நல்வினை செய்யத்தூண்டும். தீயகுணங்கள் தீவினைசெய்யப் பணிக்கும். தீயகுணங்களில்; பிறர்மீது கோபப்படுதல் மனிதனை நெறிகெடவைக்கும். இக்கோபத்தை இரண்டு சொற்களால் நம்முன்னோர்கள் வகைப்படுத்தியுள்ளனர். வெகுளி, சினம் என அவற்றைக் குறிப்பிட்டுள்ளனர். நல்ல குணமுடையோரும் கோபம் கொள்வர். அதனைச் சினம் என்று குறிப்பிட்டுள்ளனர். தீயவருடைய கோபத்தை வெகுளி எனக் கூறியுள்ளனர்.

கயவருடைய கோபத்தையும் சான்றோருடைய கோபத் தையும் ஓர் உவமையால் முன்னோர் விளக்கிக்காட்டியுள்ளனர். நெடுங்காலம் சென்றாலும் கயவருடைய வெகுளி வளர்ந்து நிற்கும். ஆனால், சான்றோருடைய சினம் தண்ணீரை நெருப்பினால் காய்ச்சும்போது உண்டாகிய வெம்மை ஒருவரால் ஆற்றப்படாமல் தானே தணிவதுபோலத் தானாகவே ஆறிவிடும். சீர்மையில் லாதவர் கோபம் கொண்டால் யார் சொன்னாலும் கோபம் ஆற மாட்டார். ஆனால் சான்றோரோ தாம் சினத்தை மேற்கொள்வது இயல்பு அல்லவெனத் தம் அறிவினால் உணர்ந்து உடனே அதனை வளரவொட்டாது தடுத்துவிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தை அடக்குவது மனிதனுக்கு நன்மை பயக்கும். சினமின்மை உயர்ந்த குணநலமாகும். சினத்தைப் பற்றி விளக்கும் வள்ளுவர் சினத்தைச் "சேர்ந்தாரைக் கொல்லி" எனக் குறிப்பிட்டுள்ளார். அது இனம் எனும் ஏமப்புணையைச் சுடுமென மேலும் விளக்கியுள்ளார். ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமாயின் தன் மனத்திலே சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சினம் அவனையே கெடுத்துவிடும். இது எமக்கு முன்னோரது கருத்து.

சினத்திற்கு நெருப்புப்போலச் சுடுகின்ற தன்மையுண்டு. எனவே, அழிவைத் தரும் சினம் மனத்தளவிலேயே அடக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் மனத்து மகிழ்வை அது கொன்றுவிடும். பிறர் எமக்குத் துன்பம் செய்தபோது வெகுளாது எமது மனத்தை அடக்கி வாழ்வதே நல்லது. இக்குணவியல்பே மனித வாழ்வில் துன்பத்தைச் சந்திக்க விடாது தடுக்கும். தன்னைத்தானே பண்புடையவனாகப் பயிற்றுவதற்கு முதலிற் சினத்தை அடக்கும் பயிற்சியை மேற்கொள்வதே நன்று. இதனை விளக்கும் பாடல் எம்மை நெறிப்படுத்துகிறது.

"நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி
கெடுங்காலம் இன்றிப் பரக்கும் - அடுங்காலை
நீர் கொண்ட வெப்பம் போல் தானே தணியுமே
சீர் கொண்ட சான்றோர் சினம்."

(நாலடியார்: 68)

வலம்புரி 06.04.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## ஈனர்க்கு உரைத்திடில் இடரதாகுமே

அறிவூட்டடல் என்பது இன்று எமக்கு மிகவும் தேவையாக வுள்ளது. சிறுவர்களை மட்டுமன்றிப் பெரியவர்களையும் கல்வியின்மூலம் நெறிப்படுத்த வேண்டியுள்ளது. சிறுவர்களை ஆசிரியரும் பெற்றோரும் வழிநடத்தக் கடமைப்பட்ட வர்கள். வீட்டில் பெற்றோர் அப்பணியை ஆற்றுகின்றனர். பாடசாலையில் ஆசிரியர்கள் அப்பணியைச் செய்கின்றனர்.

இத்தகைய இருநிலைப்பணிகளும் இன்று முழுமையாக நடைபெறுவதில்லை. சமூக நடப்புகள் இதனை வெளிப்படுத்தி யுள்ளன. அறிவூட்டடல் என்பது சரியானதொரு முறையில் நடைபெறவேண்டும். இல்லாவிடில் அதனால் எவ்வித பயனும் ஏற்படாது. இதனை ஒரு நாலடிப் பாடல் நயமாக விளக்கியுள்ளது. பாடல் சொல்லும் செய்தி எம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

காட்டில் வாழும் குரங்கு ஒன்று மரத்திலிருந்து மழையில் நனைந்து கொண்டிருந்தது. அதைக் கண்டு அந்த மரத்திலே கூடு கட்டி வாழ்ந்துகொண்டு இருக்கும் வான்குருவி குரங்கைப் பார்த்து ஒரு அறிவுரை சொல்லியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த மழையில் நனையாதிருக்க என்னைப்போல 'நீயும் ஒரு கூட்டைக் கட்டிக்கொள்வாய்" அறிவற்ற குரங்கால் இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அது தான் இருந்த இடத்திலிருந்து பாய்ந்து வந்தது. வான்குருவி அழகாகக் கட்டி வைத்திருந்த கூட்டைப் பிய்த் தெறிந்தது. பாவம் குருவி. நல்லது சொல்லப் போய்த் துன்பத்தைச் சந்திக்க நேர்ந்தது.

எனவே நல்லறிவு பெற்றவர்கள், பல நூல்களைக் கற்றவர்கள் இழிதன்மையுடையவர்க்கு அறிவுரை செய்யப் புகின் துன்பத்தைச் சந்திக்கவும் நேரிடும். குரங்கு மனமுடை யாரை வழிநடத்துவதில் மிகுந்த பொறுமை வேண்டும்.

பிறர் வாழ்வதற்கு ஏற்ற வழியைக் காட்டுவதில் மிகுந்த கவனம் தேவை. சூழலும் காலமும் ஏற்றதாக அமையாத போது அறிவூட்டல் பயன் தராது. அதனால் வாய்ப்பான சூழல் கண்டு இப்பணி செய்யப்படவேண்டும். விலங்கு மனமுடையவரைப் பண்படுத்தி அறிவூட்டலைச் செய்ய வேண்டும். இல்லாவிடில் துன்பத்தை அநுபவிக்க நேரிடும். இதனை அனைவரும் மனம் கொள்வது நன்று. அதனைச் செய்யுள் வடிவில் நம்முன்னோர் கூறிப் போந்துள்ளனர்.

"வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறி சொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக்கு உரைத்திடில் இடர தாகுமே."

(விவேகசிந்தாமணி: 10)

**வலம்புரி 13.04.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே

இயற்கையின் அரிய கொடை மழை. மழையால் எல்லா உயிரினங்களும் நலம்பெறும். புல், பூண்டு, மரம், செடி, கொடி அனைத்துமே வளம் பெறும். நிலம்கூடச் செழுமையடையும். மழைக்காலம் பருவநிலையில் குளிர்மையானது. நமது நாட்டில் மாரி, கோடை என்ற இருபருவங்களுந்தான் துல்லியமாகவுள்ளன.

மழை உயிர்களுக்கெல்லாம் அமிழ்தம் போன்றது. மழை பெய்யாவிடில் பசிய புல்லைக் காணமுடியாது. பாரிய கடல்கூட மழையின்றேல் வளங்குன்றிவிடும். உலகத்திலே தருமமும் தவமும் நடைபெறாது. இவ்வுலகில் வழிபாடு நடைபெறாது. எனவே, மழை எமக்கு நன்மைசெய்யும் இயற்கையின் கருணைக்கரங்கள் எனலாம்.

இந்த மழையை மக்களோடு தொடர்புபடுத்திப்பேசும் மரபும் உண்டு. நல்லார் ஒருவர் இருந்தால் அவருக்காக மழைபெய்யும் என்ற நம்பிக்கையும் எம்மிடையே உண்டு. மழை பெய்யாவிட்டால் இறைவனை வணங்கி வழிபாடு செய்யும் வழக்கமும் உண்டு. திருப்பாவை, திருவெம்பாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இரு பாடல் தொகுதிகளும் மழையை வேண்டிப் பாடுவதாக அமைந்துள்ளன. எல்லோருக்குமாக மழை வேண்டி வழிபாடு செய்யும் வழக்கத்தைப் பழைய தமிழ்ப்பாடல்கள் பல பதிவுசெய்துள்ளன. மழைத் தெய்வத்தின் அருள் பெறக் குறிப்பிட்ட சிலநாட்களுக்கு திருப்பாவை, திருவெம்பாவை பாடும் மரபும் இன்றுவரையும் நிலைத்துள்ளது.

நமது முன்னோர்கள் மழை ஒரு நெறியிலே பெய்யும் என நம்பி வாழ்ந்தனர். மாதம் மும்மாரி பெய்தபோது அதனை வகைப்படுத்தி வைத்தனர். வழிபாடு செய்யும் அந்தணர் பொருட்டு ஒருமுறை மழைபெய்யும். அறநெறி தவறாது ஆளும் மன்னர் பொருட்டு ஒருமுறை மழை பெய்யும். அடுத்ததாகக் கற்பு நெறி தவறாத மங்கையர் பொருட்டு ஒரு மழை பெய்யும். இவ்வாறு மூன்று மழை ஒரு மாதத்திற்குள் பெய்வது வழிபாட்டிலும், நல்லாட்சியிலும், பெண்களின் ஒழுக்க நெறியிலும்தான் என முன்னோர் திடமாக நம்பினர். இன்று செயற்கை மழைப்பொழிவை விஞ்ஞானத் தொழில் நுட்பம் சாதித்துள்ளது. ஆனால் அதைவிட இயற்கை நிலையில் மாதம் *3* முறை மழை பெய்ய நம்முன்னோர் வழி காட்டியுளர்.

மனித வாழ்வியலுக்கு அவசியமான மழையை நாம் வழிபட வேண்டும். அதற்காக ஒரு செய்யுள் வழி காட்டுகிறது.

"வேதம் ஓதிய வேதியர்க் கோர்மழை
நீதிமன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே."

(விவேக சிந்தாமணி: 22)

**வலம்புரி 20.04.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

## பருவத்தால் அன்றிப் பழா

மனிதனின் வாழ்க்கையில் எந்தக் காரியத்தைச் செய்யப் புகினும் அதற்கேற்ற காலத்தை நோக்கிக் காத்திருக்க வேண்டும். பழைய புறநானூற்றுப் புலவர் ஒருவர் "காலனும் காலம் பார்க்கும்" என்று பாடியுள்ளார். உலகப் பொதுமறை யாம் திருக்குறளும்,

"காலம் கருதி இருப்பர் கலங்காது

ஞாலம் கருது பவர்." (குறள்: 485)

எனக் கூறியுள்ளது.

உலகம் முழுவதையும் கைப்பற்ற எண்ணும் அரசர்களை நோக்கிய கூற்றாக இக்குறள் அமைந்திருப்பினும் மக்கள் யாவருக்கும் ஏற்றதாகவே உளது. நமது செயல்களுக்கு ஏற்ற காலத்தை நோக்கிக் காத்திருக்க வேண்டும் என்ற இக்கருத்து மனிதனின் வளர்ச்சி நிலைகளையும் உள்ளடக்கியே கூறப்பட்டுள்ளது.

இதனை இன்னொரு புலவர் மேலும் தெளிவாக விளக்கியுள்ளார். மக்களை நல்வழிப்படுத்தும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைச் சூழவுள்ள இயற்கைத் தோற்றத்தைக் காட்டி வழிப்படுத்துவது நன்றெனஅப்புலவர் எண்ணினார்.

ஒருவர் கூற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள மற்றவர் தயங்குவர். அவர் தயக்கத்தை நீக்க ஒரு எடுத்துக்காட்டு இன்றியமையாதது. இதனை நமது செம்மொழிப் புலவர் நன்குணர்ந்திருந்தனர்.

மனிதனைச் சூழவுள்ள இயற்கை அவனுக்குச் சில கற்பித்தலைச் செய்கின்றது. அவன் இயற்கையை நன்கு ஊன்றிக் கவனித்தால் இதனை நன்கு உணரமுடியும். நெடுத்து வளர்ந்திருக்கும் மரங்கள் எல்லாம் உடனடியாகப் பழம் தர மாட்டா. தகுந்த பருவகாலம் வந்தபின்னர்தான் பழத்தைத் தரும். இதனை மனிதன் தானே கண்டு உணரமுடியும்.

இதுபோலவே மனிதன் செய்கின்ற முயற்சிகள் எல்லாம் கைகூடும் காலத்திற்றான் நிறைவேறும். அடிக்கடி முயற்சி செய்தாலும் நிறைவேறவில்லையே என அவன் வருந்துவதிற் பயன் இல்லை. அதற்கான காலத்தை நோக்கிப் பொறுமை யுடன் காத்திருப்பதே நல்லது. இந்த இயற்கைநிலையான உண்மையைப் புலவர் செய்யுளில் நிறுத்தியிருப்பது எமக்கு வழிகாட்டுகிறது.

"அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா."

(மூதுரை: 05)

**வலம்புரி 27.04.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## மறைக்குமாம் கண்டீர் மரம்

இயற்கையிடம் மனிதன் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. மனிதன் நேரில் காணும் இயற்கை வளங்கள் அவனுடைய வளமான வாழ்க்கைக்கு உதவுவன. மனிதன் இயற்கையைத் தண்டிக்கும் நிலையும் உண்டு. தான் வாழும் சூழலிலே உள்ள மரங்களைச் சிலவேளை மனிதன் வெட்டி அழிப்பதும் வழக்கமாக உள்ளது. இது நிறுத்தப்பட வேண்டும்.

ஆனால் அந்த மரமோ அவன் தன்னை வெட்டுகின்ற வருக்கும் குளிர்மை பொருந்திய நிழலைத் தரும். கொடிய வெப்பத்திலிருந்து மனிதனைக் காத்து நிற்கும். இந்த நிலை மனிதனிலும் இருப்பதைக் காணலாம். அறிவுடைய சான்றோன் தான் சாகும்வரை தனக்குப் பிறர்பல தீமைகளைச் செய்தாலும் தன்னால் இயன்றவரை அவர்களைக் காத்திடுவான்.

மனிதன் வெட்டும்வரை, மரம் தன்கொடைப் பணியைச் செய்கிறது. வெயிலுக்கு நிழலாக நின்று காக்கின்றது. இந்த இயற்கையின் குணநலத்தை நாம் மனப்பதிவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவேண்டும். பிறருக்கு நன்மை செய்வதே மனிதனின் பெருங்குணமாக அமையவேண்டும் என நம்முன்னோர் எண்ணினர். அந்த எண்ணத்தை வெறும் கருத்தாக எடுத்துரைத் தால் எல்லோரும் ஏற்றுக்கொள்ளார்.

எனவே, கண்முன்னே கண்டு தெளிவுபெறக்கூடிய வகையில் காட்சி ஒன்றுடன் கருத்தையும் இணைத்துக் கூறின் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியும் என எண்ணிப் பாடல் வடிவிலே பதிவு செய்தனர். இளம் தலைமுறையினரும் சிறாரும் நேரிற் காணும் காட்சியையே எடுத்துக்காட்டி விளக்கினர்.

இறப்புவரை பிறருக்கு நன்மை செய்வதே மனித வாழ்க்கையின் பயனாக அமையவேண்டும். வாழ்வில் பிறரை நோக வைப்பதால் மகிழ்வாக இருக்கமுடியாது. பிறர் எமக்குத் தீமைகளையே தொடர்ந்து செய்தாலும் நாம் அவற்றை உடனடியாக மறந்துவிடவேண்டும்.

மரம் தன்னை வெட்டுபவரை உடனே மறந்துவிடும். தன் பணியைச் செய்து அவர் துன்பத்தைத் தீர்க்கும். இதனை அநுபவமாக அனைவருமே நன்கு உணரமுடியும், மூதுரைப் பாடல் இக்கருத்தை நமக்கு நன்கு தெளிவுறுத்தும்.

"சாதனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பார் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்."

(மூதுரை : 30)

**வலம்புரி 04.05.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

## ஒட்டி உறவார் உறவு

மனிதனின் மகிழ்வான வாழ்வுக்கு உறவுநிலையான தொடர்பு தேவை. பலரோடு கூடி வாழும்போது மனத்தில் சுமை சேராது. உணர்வுகள் பகிரப்படும். வாழ்விலும் தாழ்விலும் சேர்ந்து நிற்கும் உறவுகளைப் பேணவேண்டும். கூட்டுவாழ்க்கையே தமிழர் வாழ்வியலாக இருந்தது. அதனை எமது முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர். "கூடி வாழ்ந்தாற் கோடி நன்மை" என்ற கூற்றும் இதற்குச் சான்றாக உள்ளது.

தங்கள் வாழ்வியல் அநுபவத்தை மூதுரைகளாகப் பாடல்களிலே பொறித்தும் வைத்தனர். அப்பாடல்கள் இன்றும் எம்மை ஆற்றுப்படுத்துகின்றன. நமது நினைவில் தம் கருத்தை நிலைபெறச் செய்ய நாலடிகளிலே அவர் காட்டிய நன்னெறி பிறர் அறிய வேண்டியது. பெரிதும் பயன் தர வல்லது. இது ஒரு சிறந்த கையளிப்புமாகும்.

தண்ணீர் உள்ள குளத்திலே கொட்டி, ஆம்பல், நெய்தல் போன்றவை முளைக்கின்றன. அங்கே நீர்ப்பறவைகளும் தங்கியுள்ளன. குளத்து நீர் கோடையிலே வற்றியதும் பறவை கள் எல்லாம் பறந்து விடுகின்றன. ஆனால் கொட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்பலும் நெய்தலும் மட்டும் வாடிக்கிடக்கின்றன. இதேபோன்று எமது வாழ்விலும் தாழ்விலும் எம்மைவிட்டு நீங்காமல் எம்மோடு சேர்ந்து இருப்பவரே எமது உண்மையான உறவினராவார்.

பறவைகளைப்போலக் குளத்தாற் பயனில்லாத விடத்துக் குளத்தை விட்டுச் செல்லும் நிலையை உறவுகளின் தொடர்புநிலையில் வைத்துப் பார்க்கத் தூண்டும் நிலையிது. துன்பம் வந்தபோது சேர்ந்து அதை அநுபவிக்க உறவினர் கூட இருக்கவேண்டும். குளத்திலே தோன்றி வளர்ந்தவை எவ்வாறு குளத்தை விட்டு நீங்காமல் இருக்கின்றனவோ, அதேபோல நமது நெருங்கிய உறவுகளும் நம்மை விட்டு அகலமாட்டாது. அதை நாம் நன்கு உணரவேண்டும்.

வாழ்வியலில் வந்து சேரும் உறவுகளை இனங்காண இது ஒரு வழிகாட்டலாகும். தேவைக்காக எம்மை நாடிவருபவர் தமது தேவையை நாம் நிறைவு செய்ய முடியாத நிலையை அடைந்தால் மெல்ல நழுவிவிடுவர். எனவே நாம் எம்மோடு என்றும் இணைந்திருக்கும் நல்லுறவுளைப் பேணிக் கொள்ளவேண்டும். எமது முன்னோரின் அறிவுரையை ஏற்று நடப்பதே எமக்கு நன்மை தரும். உறவினரை இனங்காண ஒரு நல்ல உவமையைப் பாடல் மூலம் எடுத்துக் காட்டுகிறது மூதுரை.

"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு."

(மூதுரை:17)

வலம்புரி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## உற்றார் உலகத்தவர்

உலகத்தில் வாழும் மக்களுக்கு ஒரு விருப்பம் உண்டு. எல்லோரும் என்னை நாடிவரவேண்டும். இன்முகத்தோடு பேச வேண்டும். செல்வாக்கோடு வாழவேண்டும். பலர் இந்த விருப்பத்தை மனத்துள் பொதிந்து வைத்திருப்பர். சிலர் வெளிப்படையாகவே சொல்லிவிடுவர். இவர்களை உண்மை நிலை உணரச்செய்ய வேண்டும். ஏனெனில், இந்த விருப்பம் நிறைவேறாத போது அவர் உள்ளம் எரியும் நெருப்பாகிவிடும். முகம் வாடியிருக்கும். உடல் சோர்ந்துவிடும். எனவே!

இத்தகையவர்களை ஆற்றுப்படுத்த வேண்டியுள்ளது. கற்றவரும், செல்வரும், உடல் நலமுடையோரும் உள்ளத்தில் இந்த விருப்பைச் சுமந்து இன்று ஊனமுற்றவர்களாய் வாழ்கிறார்கள். இவர்களின் ஊனத்தைப் போக்க எமது முன்னோர் வழி காட்டியுள்ளனர்.

வளமான மரமொன்று பழுத்திருக்கும்போது வெளவாலை யாரும் இரந்து கூவி அழைக்க வேண்டியதில்லை. மரத்தருகில் நின்று அப்பணியை எவரும் செய்ய வேண்டியதில்லை. இது நாம் காணும் உண்மையான இயற்கை நிலையாகும். கன்றையுடைய பசுவானது பாலைத் தானாகவே சுரந்து கொடுப்பதுபோல ஒருவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிக்காமல் கொடையைச் செய்தால் உலகத்திலுள்ள எல்லோரும் அவரை நாடி உறவினர்போல வருவார்கள்.

பழுத்த மரம் பறவைகளுக்கு உணவு கொடுக்கின்றது. பசு பாலைக் கொடுக்கின்றது. தமக்கென எதையும் எதிர்பார்த்து இக்கொடையை அவை செய்வதில்லை. பலன் கருதாத கொடையால் மரமும் பசுவும் பலராலும் நாடி வந்து உறவு கொள்ளும் நிலையிலுள்ளன.

எனவே, பலன்கருதாத கொடைகளை நாம் செய்யும் போது எல்லோராலும் விரும்பப்படுகின்றோம். எல்லோரும் எம்மை நாடி வருவர். எம்மோடு உறவுநிலையில் தொடர்பு கொள்வர். அப்போது பலரும் எம்மை நாடிவரவேண்டும் எமது உள்ளார்ந்த விருப்பமும் நிறைவேறிவிடும். கொடை யினால் கிடைக்கும் உள்ளத்து நிறைவை நாம் அனுபவிக்கும் போது மனிதப் பிறவியின் உயர்வை உணர்ந்து கொள்ளவும் முடிகிறது. வாழ்க்கை வளமாக அமைய எம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டும். இதனை மூதுரைப் பாடலொன்று தெளிவாக விளக்கியுள்ளது.

"மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை - சுரந்து அமுதம்
கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்"

(மூதுரை :29)

**வலம்புரி 18.05.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

## பரிவதூஉஞ் சான்றோர் கடன்

சான்றோர்கள் ஒரு நாட்டின்கண் வாழும்போது அந்த நாடு அமைதியாய் விளங்கும். பல பழைய பாடல்கள் இதனைத் தெளிவாக எடுத்து இயம்பியுள்ளன. மக்கள் வாழ்வியலில் இத்தகைய சான்றோரை இனங்கண்டு அவரோடு தொடர்புற்று வாழ்வதே நன்று. சான்றாண்மை என்னம் பண்புநலனை விளக்கும் அறிஞர் அதனை வருமாறு விளக்கியுள்ளனர் :

'பலகுணங்களும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை'

உறுப்பு நலன் கருதாத குணநலமுடையோர் சான்றோர் எனப்படுவர். அவர் தமக்குத் துன்பம் செய்தவருக்கும் இன்பமே செய்வர். சான்றோரின் நலத்தை அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து தூண்களும் தாங்கி நிற்கும் என வள்ளுவர் கூறியுள்ளார்.

இவர்களுடைய இயல்பு இன்று நாம் அறிய வேண்டியது. நாம் எமது வாழ்நாளில் பலரைச் சந்திக்கின்றோம். பலரோடு பழகுகின்றோம். பலரோடு தொழில் நிலையில், உறவுநிலையில், நட்புநிலையில் தொடர்பு கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, எம் மனம் பண்பட்டிருக்க வேண்டும். அதற்கு வழி என்ன?

பிறரால் எமக்குத் துன்பம் நேரும்போது அதைப் பொறுத்துத் துன்பம் செய்தவரைத் தண்டியாது அவருக்காக இரங்கவேண்டும். பொறாமையால் பலர் எம்மைத் துன்புறுத்த எண்ணி எமக்குத் துன்பந்தரும் செயல்களைச் செய்வர். அவர்களை நாம் என்ன செய்ய வேண்டுமென நம்முன்னோர் ஆற்றுப்படுத்தியுள்ளனர்.

தம்மைப் பிறர் இகழ்ந்து வைதால், பெரும் துன்பத்தைச் செய்தால் அதைப் பொறுப்பதே மனித விழுமியமாகும். அதைவிட எம்மை இகழ்ந்தவர் செய்யும் தீவினையால் மறுபிறப்பிலே எரிவாய் நரகத்திலே வீழப்போகிறரே என அவருக்காகப் பரிய வேண்டும். இதுவே சான்றோர் குணநலமாகும்.

அறிவு நிலையிலிருந்து வழுவி மனித விழுமியங்களை மறந்து செயற்படுவோர் பரிதாபத்திற்குரியவர். சான்றாண்மை அற்றவர். அவரை வழிப்படுத்த நாம் பொறுமையுடனிருப்பதே நல்லது. அதிலும் அவர் செய்யும் காரியம் பலரையும் பாதிக்கும் தன்மையானதென்றால் அதை உடனடியாக மறந்து விடுவதே சிறந்த மனித விழுமியம். சான்றாண்மையின் இலக்கணமும் ஆகும். நாலடிப் பாடலொன்று எமக்கு வழிகாட்டியிருப்பதை மனத்துள் கொள்வது நலந்தரும்.

> "தம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்பது அன்றி மற்று
> எம்மை இகழ்ந்த வினைப் பயத்தான் - உம்மை
> எரிவாய் நரகத்து வீழ்வார் கொல் என்று
> பரிவதூஉஞ் சான்றோர் கடன்."
>
> (நாலடியார்: 58)

**வலம்புரி 25.05.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

# மானம் அழுங்கவரின்

மனிதனுடைய செயற்பாடுகளைச் செந்நெறிப்படுத்த வேண்டிய தேவை இன்று இன்றியமையாதது. வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழியை அவனுக்கு உணர்த்த ஒரு ஆற்றுகை தேவைப்படுகிறது. சமூகத்தின் அங்கத்தவனாகிய மனிதனின் 'பண்புடைமை' என்பது பாடறிந்து ஒழுகலாகும். எனவே, அவனைப் பண்புடையவனாக ஆக்குவதற்கு எமது முன்னோர் பலவழிகளைக் கூறிச் சென்றுள்ளனர்.

விலங்குகளின் வாழ்வியல் மனிதனைப் பண்படுத்துவதற்கும் உதவும் நிலையுண்டு. ஆதிகால மனிதன் காட்டிலே வாழ்வு நடத்தியவன். பல வன விலங்குகளை வேட்டையாடி வயிற்றுப்பசியைத் தீர்த்தவன். ஆனால் இன்று நாகரிக முதிர்ச்சி பெற்று நகரவாசியாகிவிட்டான். அவன் மனம் வாழ்வுச் சூழலால் மாசு பெற்றுள்ளது.

'மனத்துக் கண் மாசிலனாக வாழ்வதே அறம்' என வள்ளுவர் வரையறை செய்து விளக்கினார். மனத்திலே மாசற்று வாழ மனிதனுக்கு மானம் தேவை. 'மானம்' என்பது எக்காலத்தும் தமது நிலையிலிருந்து திரியாமை. இதனை மேலும் மூன்றாக வகுத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தன்மை குன்றும் செயல்களைச் செய்யாமை, அதனைத் தம்மை இகழ்வார் மாட்டும் செய்யாமை, இளி; வரவு, பொறாமை என்னும் இம்மூன்று பண்புகளையும் பேணுவதற்கு உள்ளத்திலே உறுதிநிலை வேண்டும். மனிதனிடம் இப்பண்புநிலை பெற விலங்கின் மனவுரத்தை அறியவேண்டும் என முன்னோர் நினைந்தனர்.

மதம்பெற்ற காட்டு யானையைக் கொன்ற புலி, யானை தன்னுடைய இடப்பக்கம் வீழ்ந்து இறந்தால் அதனை உண்ணாமல் விட்டுச் சென்றுவிடும். அதுபோல சீரிய மனவுறுதி படைத்தவர். உலகம் முழுவதையும் ஒத்த பெரும் செல்வத்தைப் பெறுவதாயினும் தமது நிலை குன்றும் செயலைச் செய்யமாட்டார்கள். வறுமையையே மனமுவந்து ஏற்பர். காட்டில் உறையும் புலியின் மனவுரம் மனித வாழ்வியலுக்கும் தேவை. புலியின் மான உணர்வைப் புறநானூறு (190) அகநானூறு (29) தணிகைப்புராணம், நாலடியார் போன்ற தமிழிலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. மனித வாழ்வில் மானம் அத்துணை அவசிய மென்பதை உணர்த்தினர். மனிதனை நெறிப்படுத்த அத்தகவல் இன்றும் உதவும்.

"கடமான் தொலைச்சியர் கானுறை வேங்கை
இடம் வீழ்ந்த(து) உண்ணா(து) இறக்கும் இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்."

(நாலடியார் : 300)

**வலம்புரி 01.06.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

## விளக்கினுள் ஒண்சுடரே போன்று

மனம் தூய்மையாக இருந்தால் மகிழ்ச்சிக்குக் குறைவு இல்லை. ஒருவர் மனம் வேறுபடாமல் இருப்பது சிறப்பானதொரு குணநலமாகும். இன்றைய உலகில் இத்தகையவர்களைக் காண்பது அரிதாக உள்ளது. உடனடித் தேவைகளை நிறைவேற்ற வேண்டித் தம்மையே தாழ்த்தும் பலர் உளர். பிறர்மீது பழிமொழி கூறுதல், புறங்கூறல் என்னும் செயற்பாட்டில் பலர் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகையோரை எம்முன்னோர் நன்கு இனங்கண்டுள் ளனர். மனிதரிடையே விரவி வாழும் இத்தகையோரைக் கண்டால் நாம் என்ன செய்யவேண்டும்? முகத்துக்கு நேரே இனிக்கப் பேசிப் போகவிட்டுப் புறங்கூறும் புல்லிய மனத்த வரும் பரிவுக்குரியவரே. அவர்களைக் கண்டால் எம்மை நாம் உறுதிபடைத்தவராய் மாற்றிக் கொள்ளவேண்டும்.

ஒருவர் எம்மைப் பற்றிப் பிறரிடம் கொடிய கோள்களைச் சொல்லி எம்மைப்பற்றிய அபிப்பிராயத்தை மாற்றிவிடக்கூடும். அதனைக் கேட்டவரும் மனம் மயங்கிச் செயற்படவும் கூடும். இவ்விருவகையினரும் அறிவு நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவுபட்டவர்கள். மனதில் மாசு படிந்தவர்கள். இத்தகை யோர் செயற்பாட்டைக் கண்டு அறிவுடையோர், தூய மனமுடையவர் கலங்க மாட்டார் கள்.

இதனை முன்னோர் கண்டு எம்மை ஆற்றுப்படுத்தி யுள்ளனர். தம்மைக் கொடியவராக்கி மிகவும் பொல்லாத சொற்களைப்பேசி மனத்தைத் திரிபுபடுத்தும் மனிதரை நாம் காணும்போது எம்முடைய மனத்தையும் அவர்களைப்போல மாற்றிவிடக் கூடாது. விளக்கிலே அசையாது நின்று எரியும் சுடர்போல மனந்திரியாமல் நிலைதளராது நிற்கவேண்டும்.

பெரியோர்களுடைய புறங்கூறும் இயல்பு கண்டு இன்று நமது சிறுவர் மனம் குழம்பியுள்ளனர். நல்லனவற்றையே தடுக்கும் சில பெரியாரைக் கண்டு அவர்களை வெறுக்க முற்படுகின்றனர். இந்நிலை நீடிப்பது நல்லது அல்ல. இளஞ் சிறாருக்கு ஏற்ற நல்லுரை கூறித் தெளிவேற்படுத்துவது இன்றியமையாதது. இப்பணியைப் பல ஆண்டுகளுக்கு முன்பே 'நாலடியார்' செய்துள்ளது. அதனை மீளவும் நினைவிற் கொள்வது வாழ்வுக்கு நலம் தரும்.

"கடுக்கி ஒருவன் கடுங்குறளை பேசி
மயக்கிவிடினும் மனப்பிரிப்பொன்(று) இன்றித்
துளக்கம் இலாதவர் தூய மனத்தார்
விளக்கினுள் ஒண் சுடரே போன்று."

(நாலடியார்: 189)

**வலம்புரி 08.06.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

## கோது போற் போகுமுடம்பு

மனிதப் பிறவி கிடைத்தற்கு அரிது. 'அரிது அரிது மானுடராதல் அரிது' என ஔவையார் கூறினார். 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என மகிழ்ந்து பாடினார் அப்பர் பெருமான். கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியால் பெற்ற யாக்கை பயன் தரும் செயல்களைச் செய்வதற்குப் பயன்பட வேண்டும். எனவே, அரிதாக எமக்குக் கிடைத்த உடம்பைப் பற்றி நாம் நன்கு அறிந்து செயற்பட வேண்டியுள்ளது.

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பு நிலையை வள்ளுவர் தெளிவாக விளக்கியுள்ளார்.

"குடம்பை தனித்து ஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

பருவம் வந்ததும் முட்டைக்கோது தனியே இருக்க அதனுள் இருந்த பறவை பறந்து போவதைப் போன்றதே உயிருக்கும் உடலுக்கும் உள்ளநட்பு என்கிறார்.

எனவே உடம்பைக் கொண்டு பயனுள்ள செயல்களை நாம் மிக விரைவாகச் செய்யவேண்டும். அறச் செயல்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும். நீண்டகாலம் வாழ விரும்புவோர் உடம்பைப் பேணி வளர்ப்பதிலேயே குறியாக உள்ளனர். இவர்கள் உடம்பு ஏன் எமக்குத் தரப்பட்டது என்பதை உணராதவர்கள்.

உடம்பினால் அறச்செயல்களையே செய்யவேண்டு மென முன்னோர் கருதி வாழ்ந்தனர். கரும்பை நெருக்கிச் சாறு கொள்ளும்போது அதற்கு மெய் வருத்தம் உள்ளதுபோல, அறச்செயல்களைச் செய்வோருக்கும் பல இடையூறுகள் ஏற்படலாம். அறிவுள்ளவர்கள் இத்தகைய மெய்வருத்தங் களை தமது அறிவினால் தள்ளி விடுவார்கள். முயற்சியால் நல்லறம் செய்து மகிழ்வர். கரும்பின் சாறு சுவை பயப்பது போல பலருக்கும் பயன்பட அறஞ் செய்வர்.

கரும்பின் கோதுபோலக் கழிந்துபோகும் யாக்கையை நிலை என்று நம்பாவ் விரைவில் அறம் செய்வதே நல்லது. யாக்கையை வளர்த்து மறஞ் செய்பவர் இதனை மனங் கொள்ளவேண்டும். உடம்பைப் பூதம் போல வளர்ப்பதால் பயனில்லை. அது நீண்ட காலம் நிலைத்து நிற்காது. மெய்வருந்தி அறஞ் செய்து பிறரை மகிழ்விப்பதற்காகவே இந்த உடம்பு எமக்குக் கிடைத்தது என்ற உண்மையை நாம் உணரவேண்டும். இக்கருத்தை நாலடியாரிலுள்ள பாடல் ஒன்று உணர்த்தியுள்ளது. அதை நாமும் உணர்ந்து செயற்படு வதே நன்று.

"அரும் பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும் பயனு மாற்றவே கொள்க - கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு."

(நாலடியார்: 34)

**வலம்புரி 15.06.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

## காக்கை உகக்கும் பிணம்

கல்வி என்பது ஒருவருக்குச் சிறப்பையும் வனப்பையும் தருவது. கற்றவர் தோற்றத்தில் ஒரு கவர்ச்சி இருக்கும். எண்ணும் எழுத்தும் எமக்குக் கண் போன்றவை. அதிலும் இளமையிற் கல்வி சிலையில் எழுத்தென்பர். நாம் தேடவேண்டிய பெருஞ் செல்வங்களிற் கல்வி முதன்மை யானது. கல்வியே கேடில்லாத செல்வம் என வள்ளுவர் விளக்கியுள்ளார். தமது முயற்சியால் தேடும் பொன்னும் பொருளும் அழிந்துபோகும். ஆனால், கல்வியோ நிலைத்து நிற்கும்.

"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்ற யவை." (குறள் : 400)

கல்வியைப் பெற்றவருடைய செயற்பாடுகள் யாவும் போற்றுதற்கு உரியனவாயிருக்கும். அவர்கள் கல்வியாளர் களோடு விரும்பித் தொடர்பு கொள்வர். அறிவுள்ளவரையே நாடிச் செல்வர். இந்த நிலையைத் தெளிவாக உணர்வதற்கு இயற்கையே எமக்கு வழிகாட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்திலே மலர்ந்திருக்கும் நல்ல தாமரை மலர்களையே நல்ல அன்னப் பறவை விரும்பிப் போயிருக்கும். பிற மலர்களை அது நாடிச் செல்லாது. அதுபோலவே அறிவுடையவர் அறிவுடையவரையே தேடிச் சென்று பழகுவர். அறிவு அற்றவர் அறிவற்றவரையே தேடிச்சென்று தமது தீய செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வர். சுடுகாட்டிலுள்ள அழுகிய பிணத்தைக் காக்கை நாடிச் செல்லுவதையே அறிவற்றவருடைய செயல் ஒத்திருக்கும்.

பறவைகளன் இயல்புகளை உன்னிப்பாக நோக்குமிடத்துச் சில மனிதருடைய குணவியல்புகளை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். அறிவு நிலைக்கேற்பப் பறவைகள் தொழிற்படுவதுபோல; அறிவு நிலைக்கேற்ப மனிதரும் தொழிற்படுவர். அறிவுநிலையில் வேறுபட்டவரை நாம் அவருடைய செயற்பாடுகள்மூலம் நன்கறியலாம். அவர் தொடர்பை விலக்கிக் கொள்ளலாம்.

இதனை இன்றைய இளந்தலைமுறையினர் அறிந்து கொள்வது நல்லது. அறிவற்ற பெரியோரின் செயற்பாடுகளை இனங்கண்டு அவரது வழிகாட்டலைத் தவிப்பது நன்மை தரும். அதேவேளை அறிவற்றவராகத் தம்மை உருவாக்கிக் கொள்ளவும் கூடாது. கல்வியைத் தேடும்போது இதனைக் கவனத்திற் கொள்ளவே நம்முன்னோர் பறவைகளின் பண்பாட்டையும், மனிதன் செயற்பாட்டையும் சீர்தூக்கிப் பாடியுள்ளனர். காலம் பல கடந்தபின்பும் மனிதரிடையே இத்தகைய தீய செயற்பாடு இன்னும் இருக்கின்றது. அதனை இளையவர் உணர இப்பாடல் உதவும்.

"நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்."

(மூதுரை: 24)

**வலம்புரி 22.06.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

## உரைத்தாலும் தோன்றாது உணர்வு

இயற்கையின் தோற்றங்கள் மனிதனுடைய இயல்புகளை உணருவதற்குத் துணை செய்யும். குறிப்பாக மனிதனை மரங்களோடு இணைத்துப் பார்க்கும் மரபு உண்டு. மரங்களின் தோற்றத்தையும் வளர்ச்சி நிலைகளையும் மிக உன்னிப்பாகக் கவனித்து நமது முன்னோர் சில கருத்துக்களை முன்வைத்துள்ள னர். இன்று விஞ்ஞான நோக்கில் மரங்களைப் பற்றிய கற்கை நெறியொன்று உளது. அது தாவரவியல் எனச் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது.

ஆனால், நமது முன்னோர்கள் தாம் நேரில் கண்ட மரத்தின் வளர்ச்சியை மக்களின் குண இயல்போடு ஒப்பிட்டு நோக்கியுள்ளனர். அதனைக் குறுகிய பாடலிலே விளக்கி யுள்ளனர். சில மரங்கள் பூக்காமலே காய்க்கும் இயல்புடை யவை. சில மரங்களின் விதைகளைத் தூவி விதைத்தாலும் அவை முளைப்பதில்லை. இதேபோல மனிதர்களையும் வகைப்படுத்த லாம்.

பூக்காமல் காய்க்கின்ற மரங்கள் இருப்பதைப்போல மனிதர்களிடையும் குறிப்பு அறிந்த செயலாற்றக் கூடியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் இருக்கிறார்கள். நன்றாகப் பண்படுத்திய நிலத்திலே விதைத்தாலும் முளைக்காத விதையைப் போல எடுத்துச் சொன்னாலும் உணர இயலாத மூடர்களும் உலகில் இருக்கின்றனர்.

இந்த ஒப்பீடு முன்னோர் அநுபவத்தால் உணரப் பட்டது. மரங்களின் இயல்பை மனிதர் கவனிப்பதில்லை. ஆனால் இயற்கை எமக்குச் சில செய்திகளைத் தருகிறது என்பதை நாம் உணர வேண்டும். மனிதன் தன்னைச் சூழவுள்ள இயற்கையை மறந்து விடக்கூடாது. மக்கள் கூடி வாழும் போது ஒருவரை யொருவர் புரிந்து கொண்டு இணைந்து வாழவேண்டும்.

மக்களின் மனவியல்பை விளக்கம் நாம் நாளாந்தம் காணும் மரங்களை எடுத்துக் காட்டும் மரபு முன்னோரால் பேணப்பட்டு வந்துள்ளது. குறிப்பறிந்து வாழும் இயல்பால் அமைதி கிடைக்கும் மூடர்களையும் அறிந்து அதற்கேற்ப பண்பட்ட மனத்தோடு அமைதியாக இருப்பதற்குப் பயில வேண்டும். இது இன்றைய காலத்திற்கு இன்றியமையாதது. முரண்பாடுகள் மலிந்த மனித மனங்களிடையே சமநிலை காணவேண்டுமாயின் மனிதரைப் பகுத்து அறிந்து கொண்டு நடக்க வேண்டும். அதற்கு வழிகாட்டும் இப்பாடலை மனங்கொள்வது வாழ்வில் அமைதியைத் தரும்.

"பூவாதே காய்க்கும் மரமும் உள மக்கள் உளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே - தூவா
விரைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு."

(நல்வழி: 35)

**வலம்புரி 29.06.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24

## மடக்கொடி இல்லா மனை

அழகு எல்லோரையும் கவரும் ஆற்றல் கொண்டது. மக்கள் தம்மை அழகுபடுத்தப் பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர். உச்சி முதல் உள்ளங்கால்வரை தமது உடலை அழகுபடுத்த முனைகின்றனர். இளமைக் காலத்து அழகினையே எல்லோரும் முதுமைவரை பேண விரும்பு கின்றனர். நரைத்துப்போன தலைமுடியைக் கருஞ்சாந்தால் கறுப்பு நிறமாக்கிச் சுருக்கும் நிறைந்த முகத்தை வர்ணப் பூச்சால் நிரப்பிக் கவர்ச்சியான தோற்றத்தை நிலைநாட்ட அல்லற்படுகின்றனர்.

இயற்கையான நிலையில் மனிதன் அழகாகத் தோற்றலாம். அதற்குரிய எளிமையான செயற்பாடுகளை எமது தமிழ் இலக்கியப் பாடல்கள் எடுத்து உரைத்துள்ளன. எம்முடைய அழகான தோற்றத்திற்கு உதவும் செயற்பாடு களால் ஒரு முழுமையான, நிலையான அழகை எமது நாட்டிற்கே நல்க முடியும். அதற்கு முதலில் பாழாகத் தோற்றும் நிலையை விளக்குவது நல்லதென நமது முன்னோர் கருதினர். எனவே, அவற்றை விளக்கிக் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக அழகுத் தோற்றத்தில் நீறு அணியாத நெற்றி வீணானது. முழு உடல் அழகிற்கும் நிலைக்களனாகக் கருதப்படும் தோற்றத்தைப் பெற எமது உணவுப் பழக்கத்தில் கவனம் தேவை. நெய்யில்லாமல் நாம் உண்ணும் உணவு வீணானது. ஒரு ஊருக்கு அழகு தருவது ஆறு. ஆறில்லாத ஊரின் அழகு பாழானது. வீட்டின் அழகுநிலைக்கு உடன் பிறப்பு மிக முக்கியமானது. மாறுபடாமல் கலகலப்பாக உடன்பிறப்புக்கள் இணைந்து வாழும் வாழ்க்கை மிக அழகானது. அழகான வீடு இருந்தபோதும் இல்லறத்தைச் செய்யும் இல்லாள் இல்லாவிட்டால் அந்த வீடு பாழடைந்த வீடாகவே காணப்படும். இல்லத்தினை ஆள்கின்ற இல்லாள் வீட்டின் அழகுக்கு இன்றியமையாதவள். மனைக்குத் தலைவியாக : 'மனைவி'யாகச் சிறப்புப்பெற்றவள்.

எனவே அழகு என்பது தனிமனிதனுடைய கவர்ச்சி நிலையன்று. வீடு இணைந்த, ஊருடன் ஒன்றியைந்த நாட்டின் நிறைவான அழகாகும். இந்த நிலைபெற்ற அழகை நிலைநாட்டப் பாழ்பட்டுக் கிடக்கும் நிலைகளைச் சீர்செய்ய வேண்டும். எமது முன்னோரின் எண்ணத்தில் அழகு பற்றிய கருத்து நாடு தழுவியதாகப் பரந்திருந்தது. வழிபாடும், வளமான உணவும், இயற்கையான நீர் வளமும், உடன் பிறப்பின் உதவியும் அறம் செய்யத் துணையான பெண்மை யும் இருந்தால் அழகு எம்மோடு என்றும் நிலைத் திருக்கும் என அவர்கள் காட்டிய வழியே எமக்கு நல்வழியாகும்.

"நீறு இல்லா நெற்றி பாழ், நெய்யில்லா உண்டி பாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - மாறு இல்
உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ், பாழே
மடக்கொடி இல்லா மனை"

(நல்வழி: 24)

**வலம்புரி 06.07.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

## உண்ணீர்மை வீறும் உயர்ந்து

செல்வத்தைச் சேர்க்கவேண்டும் என்பதே இன்று மனிதரின் இலக்காக உள்ளது. 'பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை' என்ற கருத்தும் வலுவடைந்துள்ளது. மனித முயற்சியில் பொருள் தேட்டத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. உலகில் மதிப்போடு வாழ்வதற்குச் செல்வமே துணை நிற்கும் எனப் பலர் நம்பிக்கை கொண் டுள்ளனர். எனவே அச்செல்வத்தைப் பலவழிகளாலும் தேடுகின்றனர்.

இன்றைய உலகில் பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்கின்றனர். செல்வமுடையோருக்கே சிறப்புச் செய்கின் றனர். இக்கருத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் கூறியுள்ளார்.

"இல்லாரை எல்லோரும் எள்ளுவர், செல்வரை

எல்லோரும் செய்வர் சிறப்பு."

ஆனால், செல்வம் மனிதனுடைய வாழ்க்கையில் தொடர்பு பட்டிருக்கும் நிலையை ஔவையார் மிக அழகாக ஒரு நான்கடிப் பாடலிலே விளக்கியுள்ளார். இயற்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றப்பாட்டுடன் அதனை இணைத்துக்காட்டியுள்ளார். செல்வம் என்பது ஆற்று வெள்ளத்தினால் ஏற்படும் மேடும் பள்ளமும் போன்றது. ஆற்றின் நீர்ப்பெருக்கிற்கேற்ப மேடும் பள்ளமும் தோன்றி மறைவது போலச் செல்வமும் பெருகி மறையும் தன்மையது. நிலையற்ற பண்புடையது.

எனவே, உலகத்து மக்களுக்கு ஔவையார் ஓர் அறிவுரை கூறுகின்றார். "செல்வத்தைச் சேர்த்து வைத்து மதிப்போடு வாழ நினைக்காதீர்கள். அது உங்களிடம் இருக்கும்போது பயனுள்ள கொடையைச் செய்யுங்கள்!" அந்தப் பயனுள்ள கொடை என்ன என்பதையும் அவரே விளக்கியுள்ளார். பசித்தவர்களுக்கு உணவளிப்பதும், தாகமுற்றவருக்கு நீர்க்கொடை செய்வதுமே முதற்கொடையாகும். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்த வராவார் என 'மணிமேகலை' என்னும் இலக்கியமும் கூறியுள்ளது. உணவும் நீரும் கொடுக்கும் உயர்ந்த கொடையால் ஒருவர் உள்ளம் தூய்மையாகும். தர்ம சிந்தனை உண்டாகும். உள்ளத் தூய்மையால் செயற்பாடுகளில் பொலிவுண்டாகும். செல்வத்தை வீணே சேர்த்து வைத்திருப்பவரை வழிப்படுத்த அன்று ஔவை சொன்ன மூதுரை இன்றைக்கும் ஏற்றதாக வுள்ளது. எனவே அவர் பாடலைப் படித்து மனதில் பதிய வைப்பதும் நன்று.

"ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறு இடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து"

(மூதுரை : 33)

வலம்புரி 13.07.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

# தேற்றும் புலவரும் வேறு

புலமையென்பது எல்லோராலும் மதிக்கப்படும் சிறப்பு நிலையாகும். கல்வி கற்றவர் அனைவரும் புலமையுடையவர் ஆகார். புலமையுடையவரை இருபகுப்பினராக நமது முன்னோர் விளக்கியுள்ளனர். புத்தகங்களை மிகவும் நன்றாகத் தொகுத்து வைத்திருப்போர் ஒருவகையினர். மற்றொருவர் தொகுக்கப்பட்ட நூல்களில் உள்ள தெளிபொருளைப் பிறர்க்கு எடுத்துச் சொல்ல வல்லவர்.

உள்ளத்திலே நிறைய விடயங்களை வைத்திருப்பவர் அவற்றையெல்லாம் எழுத்திலே வடித்துப் பல புத்தகங்களாக வெளிவரச் செய்வர். அவ்வாறு பல நூல்களை ஆக்குபவர் அவற்றின் பொருளைப் பிறருக்குத் தெளிவாக எடுத்து ரைக்கும் ஆற்றலையும் பெற்றிருக்கவேண்டும். அத்தகைய ஆற்றலுடை வரையே 'புலமையாளன்' எனச் சிறப்பித்துக் கூற முடியும் என்பது நம்முன்னோர் கருத்தாகும்.

சிலர் நல்ல நூல்களையெல்லாம் வாங்கிச் சேர்த்து வைத்திருப்பர். ஆனால், அவற்றை படித்திருக்கமாட்டார்கள். அவர்களுடைய செயற்பாட்டையும் முன்னோர் அவதானித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளனர். எனவே மக்கள் யாரோடு சேர வேண்டும் என்பதைச் சொல்லி வைக்க முற்பட்டனர். புலமையாளரை நாடிச் செல்வோரை வழிப்படுத்தவும் எண்ணினர். இருவகைப்பட்ட புலமையாளரை இனம் காட்டியுள்ளனர்.

நூல்களின் நுண்பொருள்களை அறிய வல்லவரே ஓர் அவையில் அங்கம் வகிக்கத்தகுதி பெற்றவராவர். மற்றவர் களுக்குத் தான் கற்றதை எடுத்துச் சொல்லும் புலமைச் சான்றோரால் பலர் பயனடைய முடியும். வாய்மொழி மரபிலே வளர்ந்த கல்வியும் இத்தகைய புலமையாளரால் தலைமுறை தலைமுறையாகக் கையளிப்புச் செய்யப்பட்டு வந்தது.

இன்று தொழில்நுட்ப முன்னேற்றத்தால் புத்தகங்களின் ஆக்கம் பெருகிவிட்டது. ஆனால் வாசிக்கும் பழக்கம் அருகி வருகிறது. புத்தகத்தைப் பொறுமையாய் இருந்து படிக்க விடாமல் மின்னியல் ஊடகங்கள் செல்வாக்குப் பெற்று விட்டன. வானொலியும் தொலைக்காட்சியும் சிறுவர் உள்ளங்களை முற்றாக ஈர்த்துள்ளன. எனவே புத்தகங்கள் சொல்லும் கருத்துக்களை எடுத்துச்சொல்லவல்ல புலமைத்திறன் படைத்தோரை அவைக்கு அழைக்க வேண்டும். சிறப்பாகப் பழந்தமிழ் நூல்களின் தொகுப்புகளில் உள்ளடக்கப்பட்ட சிறப்பான செய்திகளையும் தகவல் ளையும் நடைமுறைகளையும் எடுத்து விளக்கும் புலமை யாளரை நாடப் பின்வரும் பாடல் வழிகாட்டு வதாயுள்ளது.

"புத்தகமே சாலத்தொகுத்தும் பொருள் தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும் - மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு."

(நாலடியார் : 318)

**வலம்புரி 27.07.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

## புகற்கரிய பூழை நுழைந்து

வறுமை மனித வாழ்க்கையைச் சீர் குலைக்கும் ஒரு கொடிய நோயாகும். வயிற்றுப் பசிக்காகப் பிறரிடம் இரந்து நிற்கின்ற நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. எனவே வறுமையினால் பாதிக்கப்பட்டவனை, அவனுடைய நொய்மையான தன்மை யினை நாம் நான்கு உணரவேண்டும். அதற்கு என்ன வழியெனப் பழைய பாடல் ஒன்று விளக்கம் தருகின்றது.

நமது வாழ்க்கையில் கேள்விப்படும் செய்திகள் பல. பிறர் தமது பட்டறிவுமூலம் சொல்பவற்றை நாம் கேட்டு மனதில் பதிய வைக்கிறோம். உணவு தயாரிக்கும் நிலையில் நீரைக் காட்டிலும் நுண்மையானது நெய் எனப் பலர் அறிந்துள்ளனர். நெய்யையும் நீரையும் தனித்தனியே இலையிற் கட்டி வைத்தால் அந்நீர் இருக்க நெய் உருகிப் புறத்தே ஓடும். இதனால் நீரைக் காட்டிலும் நெய் நுண்மையானதென்பது விளக்கமாயிற்று.

எனினும் நெய்யைவிடப் புகை நுட்பமானது எனக் கூறப்படுகிறது. ஒரு குடம் நெய்யை வீட்டின் மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரிந்தாலும் உள்விழாமல் புறமாகப்படும். ஆனால் வீட்டின் உள்ளே எரித்த நெருப்பின் புகை கூரையால் மேலே வெளிப்படும். இதனால் நெய்யைக் காட்டிலும் புகை நுட்பமானதென உணரமுடிகின்றது.

ஆனால் இவற்றைவிட வறுமையால் பிறரிடம் சென்று இரப்பவன் புகையும் செல்வதற்கு அரிய இடத்திற்கும் நுழைந்து செல்வான். வறுமையால் சென்று பிறரிடம் யாசிப்பவன் மிகவும் நொய்யன். அவன் நிலைகண்டு அவனுக்கு உதவி செய்ய வேண்டும். "வறுமை கொடிது, அதனிலும் கொடிது இளமையில் வறுமை" என ஔவையார் கூறியுள்ளார். எளியார் இவரென்று பிறரால் இகழப்படாமல் வாழ்வது இனிது. அந்த வாழ்க்கையை யார் அமைத்துக் கொடுக்கலாம்?

பணத்தைத் தேடி வைத்திருப்போர் இவ்வறுமையின் துன்பநிலையை உணர வேண்டும். வறுமையைப் போக்கி அவர்களுக்கு வாழ்வளிக்கவேண்டும். நொய்யமனத்துடன் வாழும் அவர்களைத் திடமுள்ளவராக்க வேண்டும். 'பிறரிடம் இரந்து வாழ்வதை விட இறப்பதே மேல்' என அவர்கள் வாழ்வை முடித்துக் கொள்ளவும் முயல்வர். அவர்கள் அந்நிலைக்குச் செல்லாமல் பணம் படைத்தோர் அவர்களை வாழ்விக்க வேண்டும். அப்போதுதான் வறுமை என்னும் கொடிய நோய் தீரும். எல்லோரும் நலமுடன் வாழ சமூகம் நலம்பெறும். நாடு வளம்பெற நாலடியார் கூறிய செய்தி இதுவே:

"நீரினும் நுண்ணிது நெய்யென்பர், நெய்யினும்
ஆரும் அறிவர் புகைநுட்பம் - தேரின்
இரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து"

(நாலடியார்: 282)

**வலம்புரி 03.08.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

## கைப்பறா பேச்சுரையின் காய்

உண்மை பேசுவது ஓர் உயர்ந்த பண்பாகும். நிலையற்ற உடம்பைக் கருதிப் பொய் கூறும் இயல்பு இப்போது தோன்றியுள்ளது. இதனைக் களைய வேண்டியது அவசியம். உண்மை பேசுவதை ஒரு விரதமாகக் கடைப்பிடிக்க வேண்டும். உண்மை என்பது உள்ளத்திலிருந்து வரும் சொல்லாகும். இதனை மெய்ம்மை எனவும் முன்னோர் கூறினர்.

பொய் பேசும் குண இயல்பு பெரும்பான்மையும் காமமும் பொருளும் தொடர்பாக ஏற்படுவது. எனவே இது கூடா வொழுக்கம் என இகழப்பட்டது. கல்வியறி வில்லாதவர் ஆயினும் மெய்ம்மையுடையவர் நல்லவராவார். கல்வியிற் சிறந்த ஒருவர் பொய்ம்மை உடையவரானால் தீயவராவார். கற்றபடி ஒழுக வேண்டியவர் அதற்கு மாறாக நடப்பின் அவரைக் கற்றவர் எனக் கருதமுடியாது.

இத்தகையவர்களைத் திருத்துவது எளிதன்று. உள்ளத்தைப் பொய்ம்மை வழியிலே செலுத்துபவரை அடக்கமுடியாது. தம் செயற்பாட்டின் விளைவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் அவர்கள் அறிவு வழி நின்று எண்ணிப் பார்ப்பதில்லை. தீமை வழிச் செல்லும் அவர்களை அறிய முன்னோர் ஓர் உவமையால் விளக்கியுள்ளனர்.

உண்ணும் உணவைச் சுவையுடன் உண்ணுவதற்கே எல்லோரும் விரும்புவர். உணவு கசப்பானதாக இருந்தால் அதனை இனிப்பாக மாற்றியமைக்கப் பல முயற்சிகளை மேற்கொள்ளும் வழக்கம் உண்டு. பேய்ச்சுரைக்காயைக் கறி சமைக்கும்போது உப்பு, பால், நெய், சர்க்கரை, பல்வேறு சரக்குகள் சேர்த்தாலும் அதன் கசப்பு அற்றுப் போகாது. நல்ல சுவையான கறியாக அதை மாற்ற முடியாது.

இதுபோலவே கற்றவர்கள் மெய்ம்மை வழி நில்லாது பொய்ம்மை வழிச்செல்லும்போது தடுப்பது கடினம். அவர்களுடைய அறிவாற்றலே திரிந்துவிடும். தம்நிலை மறந்து பொய்ம்மை பேசிச் செயற்படுவர். அதனாற் பெறும் பொருள் வளத்தையும், காமவின்பத்தையும் நிலையானதென்று எண்ணிவாழ்வர். கூடாவொழுக்கம் மேற்கொள்ளும் கல்வியாளரைப் பற்றிப் படிப்பறிவற்ற மெய்ம்மை வாழ்வு மேற்கொள்வோர் இதனை நன்குணரவேண்டும். நமது முன்னோர் சமூகத்திற் கல்வியாளர் செயற்பாடுகளை நன்கு ஊன்றிக் கவனித்துள்ளனர். கல்வியறிவில்லாதவரிடையே இந்த உண்மை நிலையைத் தெளிவுபடுத்த விரும்பியுள்ளனர். அதுவே நாலடிப் பாடலாகப் பெண்ணை விளித்துச் சொல்லும் அறிவுரை ஆயிற்று.

"இடம்பட நன்ஞானங் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார் - தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பால் தயிர் காயம் பெய்தடினும்
கைப்பறா பேச்சுரையின் காய்."

(நாலடியார்: 116)

**வலம்புரி 10.08.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29

## குறிப்பின் கீழ்ப்பட்ட துலகு

மக்களுக்கு இருக்கவேண்டிய உயர்ந்த குணவியல்புகளில் முயற்சியும் ஒன்றாகும். இதனைத் "தாளாண்மை" எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். தாள் என்பது முயற்சி. ஆண்மை என்பது அதனை உடைமை. முயற்சி செய்வதால் பொருள் கிடைக்கும். அப்பொருளால் குலமும் பெருமையும் மேம்பாடும் மதிப்பும் சுற்றமும் நட்பும் அறமும் இன்பமும் உண்டாகும். எனவே சோம்பலின்றி யாவரும் இடைவிடாது முயற்சி செய்யவேண்டும்.

முயற்சியுடையவரை அறிவதற்கு அவருடைய தனித்துவமான செயற்பாடுகள் உதவும். அவரவர் செய்கின்ற முயற்சிக்கு அவரவருடைய உறுப்புகளே இடையூறு செய்யக் கூடும். அதனை உணர்ந்து தமது உறுப்புக்களின் செயற்பாட்டையும் அடக்கக் கூடிய வலிமை பெற்றவரே அறிவுடையவராவார்.

மனிதருடைய உறுப்புக்களிற் கண், மூக்கு, வாய் என்னும் மூன்றும் முயற்சியைத் தடுக்கும் ஆற்றலுடையவை. தூக்கமும், வாசனையும், சுவையும் முயற்சியை இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தும் தன்மையன. பார்வையும் சொல்லும் காமத்தையும் வெகுளியையும் ஏற்படுத்தும் செயற்பாடுடையவை. இதனை உணர்ந்தவர் தமது முயற்சியைச் செய்யும்போது இடையூறு ஏற்படின் அதனை மனத்தால் அடக்கி விடுவர். எண்ணிய கருமம் முடியும்வரை மனந்தளராது செயற்படுவர். பிறருடைய உறுப்பினாலே இடர் ஏற்பட்டாலும் அதனை ஆராய்ந்து அறிந்து அதற்கு ஆவன செய்து இடையூறுகளைத் தவிர்க்கவேண்டும். இத்தகைய குறிப்பறியும் ஆற்றல் உடையவரையே உலகம் வியந்துபாராட்டும்.

தாம் நினைத்த நல்ல காரியம் முடியும்வரை தமது உணர்வுகளை அடக்கிக் கோபம் வந்தாலும் அதை அடக்கி முயற்சியை மேற்கொள்பவரையே நமது முன்னோர் "அறிவுடையோர்" என இனங்காட்டினர். அவரையே மாட்சியுடையவரெனப் பாராட்டினர். இத்தகையவர் கீழ் உலகமே அடங்கும் மனவெழுச்சியை அடக்கும் பயிற்சி மனிதருக்கு இன்றியமையாதது. அறிவினால் இதனைச் சாதிக்க முடியும். மனித உறுப்புக்களின் தொழிற்பாட்டை அறிவினால் நெறிப்படுத்த வேண்டும். என்பதே ஆன்றோர் கருத்து. உலகம் உள்ளவரை மனிதருடைய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்க அவர்கள் அன்று சொன்னது இன்று எமக்கும் பயன்படும். அதற்காகப் பாடலைத் தருகின்றோம்.

"ஆற்றுந் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார் - ஊக்கம்
உறுப்பில் ஆராயும் ஒண்மை உடையார்
குறிப்பின் கீழ்ப் பட்ட துலகு."

(நாலடியார்: 196)

**வலம்புரி 18.08.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30

## மனம் வேறு செய்கையும் வேறு

ஒருவருடைய உள்ளக்கிடக்கையை இன்னொருவர் முழுமையாக அறிய முடியாது. நம்முடைய உள்ளத்தையே நம்மால் அறிய முடியாது எனச் சான்றோர் கருதுகின்றனர். அறிவினால் அதனைச் செய்ய முடியுமென்பர் சிலர். மக்கள் மனதிலே கருதுவது ஒன்று. ஆனால் செயற்பாடு வேறாக இருக்கும். எண்ணமும் செயலும் ஒன்றுபட்டவர் மிகச்சிலரே.

தம்முடைய நெஞ்சத்தை வேறுபடுத்தி வாழ்பவர் தீவினைப் பயனை அனுபவிப்பவர். நெஞ்சை வேறுபடுத்திப் பொல்லாதவராக ஒருவரை ஆக்குவது தீவினையே. அத்தகைய தீவினையாளரைச் சேருவிப்பதும் எமது தீவினையே. எனவே நாம் அத்தீவினைக்கு அஞ்சி நன்னெறியிலே ஒழுகவேண்டும்.

செயல்வேறு, சொல்வேறுபட்டாருடைய தொடர்பு கனவிலும் பெரும் துன்பந்தருமென வள்ளுவர் கூறியுள்ளார். ஒளி வீசும் மணிகள் மலைப்பக்கத்திலே கிடந்தாலும் தம்முடைய ஒளியால் பலருக்கும் தம்மைப் புலப்பட வைப்பதுபோல ஒருவரின் மனம், மொழி, மெய்யின் தூய்மை தானாகவே பிறர்க்குப் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒருவரோடு நட்புக்கொள்ளும்போது ஒருவரைப் பலவழியாற் பலமுறை ஆராய்ந்தே நட்புக்கொள்ள வேண்டும். சிறந்த அறிவுடையோரும் பண்பாளரும் தீவினை யாளருடன் தொடர்பு கொள்ளுவதால் தீவினைகளைச் செய்யும் மனப்பக்குவம் பெற்றுவிடுவர். மெய்யினாலும் மனத்தினாலும் பாவம் செய்யத் தலைப்படுவர்.

மனை வாழ்க்கைக்குத் தீவினையச்சம் இன்றியமை யாதது. ஏனெனில் இல்லறத்திருப்போர் பலரைப் பாதுகாக்க வேண்டியவர். நன்னெறிப்படுத்தும் கடமையை ஏற்றவர். எனவே அவர்களை வழிப்படுத்த வேண்டிப் புலவர் ஒருபாடலைப் பாடியுள்ளார். அப்பாடல் விளித்துக் கூறுமுகமாக அமைந்துள்ளது. தனி ஒருவரைப் பற்றிக் கவலையுறாது மக்கள் எல்லோரையும் நினைத்து அறிவூட்ட எண்ணுகிறார்.

உளவியல் நிலைநின்று ஆற்றுப்படுத்தும் புலமை மக்கட் சமூகத்தை நல்வழிப்படுத்தும் பண்புடையது. காலம் பல கடந்தும் மக்களின் மனம் பண்படவில்லை. அறிவு நிலையில் நின்று செயலாற்ற முடியாமல் புலன் வழிச்சென்று சீரழிந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த நிலையை நீடிக்கவிடாது ஏற்றது செய்யவேண்டும். நோயுற்ற சமூகத்தின் செல் நெறியைச் சீர்செய்யப் பழைய பாடல்கள் நிச்சயம் உதவும். அதனை மனங்கொள்ள வேண்டுகிறோம்.

"யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர் - சாரல்
கனமணி நின்றிமைக்கும் நாட ! கேள் மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு."

(நாலடி: 127)

**வலம்புரி 24.08.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31

## அற்புதாம் என்றே அறி

நாம் வாழுகின்ற உலகத்திலே வியக்கத்தக்க நிலைகள் பல உண்டு. அவற்றைப் பற்றி அறியவேண்டும். இயற்கை நிலையிலும் செயற்கைநிலையிலும் காணுகின்ற தோற்றங்களை நாம் உன்னிப்பாகப் பார்ப்பதில்லை. அது மிகத்தவறு. எம் எதிரே தோன்றுவதைச் சற்று நின்று நிதானித்து நோக்கவேண்டும்.

நிலத்தின் தன்மைக்கேற்ப நீர் சுவையானதாக இருக்கிறது. கொடை வழங்கும் இயல்பால் நல்லவர் களுடைய குணத்தை அறிந்து கொள்ளமுடியும். பிறரைக் கருணையோடு பார்க்கும் கண்கள் பெருமைக்குரியவை. பெண்களுடைய கற்புநிலை தவறாத வாழ்வியல் அவர்க ளுடைய நேர்மையை உணர்த்தும். இத்தகைய விடயங்களே உலகத்திலே வியக்கத்தக்கவை எனப் பெரியோர்கள் கூறியுள்ளனர்.

நிலமும் கொடையும் பெண்மையும் பிறரை வாழ வைக்கும். வளமான நிலமிருந்தால் வாழ்வும் செழிக்கும். பொருட்கொடை யாளர்களின் கொடை பிறரை வாழவைக் கும். கருணை மிகுந்த பார்வையால் ஒருவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையைத் தீர்க்க முடியும். பிறருடைய அன்பான நோக்கு சோகவயப்பட்டவரை மீட்கும் அருமருந்து. சமூகத்திலே பெண்களுடைய செம்மை திறம்பாத சொல்லறந்தான் எல்லோரையும் உயர்ந்த நிலையில் வாழ வைக்கும்.

மேற்சொல்லப்பட்ட நான்கு பண்புகளையும் நாம் விரிவாக உற்று நோக்கவேண்டும். எல்லாவற்றிலும் பரிவு என்னும் உணர்வே ஓங்கி நிற்கிறது. கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் வாழ்க்கையை மேம்படுத்தப் பாடுபடுகின்ற பெண்மையைப் போற்றாதவர் யாருமில்லை. நான்கு பண்புகளையும் பெண் தன்னகத்தே கொண்டுள்ளாள். இதனால் தமிழர் பண்பாட்டிற் பெண் தெய்வமாகப் போற்றப்படுகிறாள். பெண்ணின் நேர்மை பலருக்குக் கவசமாகவும் அன்று விளங்கியது. நிலத்தின் பண்பையும், நீரின் தன்மையையும் பெண்ணே தன்னகத்துக் கொண்டிருந்தாள். அதனால் அவளே "இல்லாள்" எனப் போற்றப் பட்டாள்.

கடலாற் சூழப்பட்ட உலகத்திலே என்னதான் வியப்பாக இருக்கிறது என்று ஆராயும் இக்காலத்தில் இதனைத் தெளிவாக நாலடிகளிற் சிறப்பாக ஒரு பாடல் விளக்கிக் காட்டுகிறது. அப்பாடல் கையடக்கத் தொலைபேசியைப் போலத் தொடர்பாடலை நம்மிடையே ஏற்படுத்தும் நயமுடையது. பாடல் இதோ!

"தண்ணீர் நில நலத்தால் தக்கதோர் குணம் கொடையால்
கண் நீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை
கற்பு அழியா ஆற்றலால் கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி."

(நல்வழி: 16)

**வலம்புரி 31.08.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32

## புல்விதழ் பூவிற்கும் உண்டு

மனிதனுக்கு நட்பு இன்றியமையாதது. சிறு பிள்ளைப் பருவம் முதல் முதுமைக்காலம் வரை நட்பு துணையாய் இருப்பின் தனிமைக்கு இடமில்லை. இன்று பலர் இத்தகைய ஒரு நட்புத் தமக்குத் தேவையென்பதை உணராமலிருக் கின்றனர். நட்பு நிலையில் ஒருவருக்கொருவர் பிழைசெய்ய முற்படார். ஆனால் அவ்வாறு நட்பாயிருப்பவர் பிழை செய்தால் அதைப் பொறுத்துக் கொள்வதே உயர்ந்த குணமாகும். ஆனால் இக்குண இயல்பு எல்லோரிடமும் இருப்பதில்லை. நிறைவான அமைதியான வாழ்க்கைக்கு இத்தகைய நட்பிற் பிழை பொறுக்கும் பண்பு நலன் வேண்டும்.

இப்பண்புநலனைப் பெறும் வழியை எம்முன்னோர் கூறியுள்ளனர். உள்ளன்புடன் உதவுபவரை ஆராய்ந்து தேடி நட்புக்கொள்ள வேண்டும். நட்புக் கொண்டவர் செய்த பிழையை, அறியாமை எனத் தெளிந்து அவர் செய்த பிழையை மன்னிக்கும் மனப்பாங்கு கொண்டவரே மனிதரா வார். மிகவும் நல்லவர் என்று விரும்பிக் கொண்டவரை அல்லார் என அறிந்தபோதும். அதனை மனத்திலே மறைத்து வைத்துவிட்டு நட்புரிமையோடு பழக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையற்றவரை இவ்வுலகிற் காண்பதரிது. இயற்கை நிலையிலே இத்தன்மை கண்கூடு. இதனை நம் முன்னோர் நன்குணர்ந்துள்ளனர். யாவருக்கும் பயன்படுகின்ற நெல்லுக்கும் உமி உண்டு. நீரிலும் நுரையாகிய குற்றம் காணப்படுகிறது. பூவிலும் புல்லிதழாகிய குற்றம் உண்டு. இவற்றைப் போன்று நட்பாளருடைய தீய குணங்களைக் கண்டால் அதனைப் பொறுத்து நடப்பதும் நட்பின் உரிமையாகும். இது ஓர் உயர்ந்த பண்புநலன்.

எனவே, நண்பர்களுடைய குணத்தைக் கருதிக் குற்றங்களைக் கைவிடவேண்டும். பூவின் புறத்து இருக்கும் இதழ் புல்லின் உருவமுடையது. அதனைக் குற்றம் எனக் கொண்டால் பூவின் அழகை நாம் நோக்கமுடியாது. நல்லவரும் நட்புக்கொண்டிருந்த போது தமது வினைவலியால் குற்றம் செய்ய நேரிடலாம். நல்லோரிடத்துள்ள குற்றநிலையை மூன்று பொருள்களை எடுத்துக் காட்டி விளக்கியமை சாலவும் பொருத்தமானது. வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் ஒரு துன்பநிலையை எப்படித்தாங்குவது என்று குழம்பி நிற்போர் மனத்தை ஆற்ற நாலடிப் பாடல் இக்கருத்தை முன்வைத்துள்ளது. பழமொழி நிலையில் இப்பண்பு "ஒருவர் பொறையிருவர் நட்பு" என விளக்கப் பட்டுள்ளது.

"நல்லார் எனத்தாம் நனி விரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்
நெல்லுக்கு உமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு."

(நாலடியார்: 221)

**வலம்புரி 07.09.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33

## தூற்றாதே தூரவிடல்

தமிழர் வாழ்வியலைச் சான்றோர் இல்லறம், துறவறம் என இரண்டாகப் பகுத்துள்ளனர். அறநெறியாளர்கள் இவ்விரு அறங்களைப் பற்றித் தெளிவான பல விளக்கங் களையும் தந்துள்ளனர். இல்லில் இருந்து பலரையும் பாதுகாத்து ஓம்புவது இல்லறம். புலன்களையெல்லாம் அடக்கிப் பற்றுக்களைத் துறந்து தனித்து வாழ்வது துறவறம். இல்லறமே மக்களால் விரும்பப்படும் வாழ்வியலாகும். அதன் சிறப்புக்கு மக்களின் குணநலன்களும் காரணமாகின்றன. அக்குணங்களில் முதன்மையானது பொறையு டைமை எனக் கருதப்படுகிறது.

பொறை என்னும் விரதத்தைத் தமக்கு உடைமையாகக் கொள்பவர் தனித்துவமானவர். சினத்தை விட இக்குணம் போற்றுதற்குரியது. சினமின்மையென்பது பிறர் தம்மனம் சினமடையத்தக்க குற்றங்களைச் செய்தபோது அவர்மேல் கோபம் எழாமல் அறிவினால் அடக்குதலாகும். பொறை யுடைமை யென்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றிற்கு ஏற்றவை ஒழிந்து பிறிதொன்றினால் இப்புலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குத் தகாத குற்றங்கள் வந்தால் பொறுத்துக் கொள்ளுதலாகும்.

இதனை வாழ்வியலிற் பொருத்தி விளங்கிக்கொள்வதே நனறு. வேறுபாடின்றி இருவர் நட்புக்கொண்டு பழகும்போது அறிவின்மையால் ஒருவர் தீயவொழுக்கத்தை மேற்கொள்ளக் கூடும். அதனை மற்றவர் பொறுத்துக்கொள்ள வேண்டும். நட்பைத் தூரவிடாது இருக்கவேண்டும். அவர் செய்த தீமைகளைப் பற்றிப் பிறரிடம் கூறாமல் பொறுத்திருப்பதே நற்குணமெனக் கருதப்பட்டது. அவ்வாறு அச்செயலை ஆற்றுமளவும் பொறுத்திருப்பவரே பொறுமையுடையவரா வார். ஒழுக்கமும் நற்குணங்களும் அறியாது வேற்றுமை யில்லாமற் கலந்த நட்புணர்வால் ஏற்படும் உறவு முறியக் கூடாது. இதுவே சான்றோரது முடிபாகும்.

நட்புநிலையில் ஒருவர் தீயவொழுக்கமுடையவரானால் அவ்வொழுக்கத்தை அவராகவே வந்து கூறும்வரை பொறுமை யுடனிருப்பது ஒரு விரதமாகும் . வள்ளுவரும் இதனை

"அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்

வழிவந்த கேண்மை யவர்."

என எடுத்துரைத்துள்ளார். கேண்மை நிலையில் அன்பு அறாமல் இருக்கும். இதனை நாலடிப்பாடல் ஒரு விரதம் என விளக்கி நிற்கிறது.

"வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தோற்றா ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாகில்
ஆற்றுந் துணையும் பொறுக்கப் பொறானாயில்
தூற்றாதே தூர விடல்."

(நாலடியார்: 75)

**வலம்புரி 14.09.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34

## பாம்பின் தலைநக்கி அன்னது உடைத்து

நல்வாழ்க்கைக்கு ஒழுக்கமான செயற்பாடு இன்றியமையாதது. ஒழுக்கமுடைமை என்பது ஓர் உயர்ந்த குணமாகும். மனித வாழ்க்கையில் இக்குணநலன் இல்லாவிட்டாற் பல கேடுகள் விளையும். ஒழுக்கமின்மை என்னும் குணநலத்திற்கு ஊறு செய்யும் செயற்பாடு சமூகத்தின் செல்நெறியைச் சிதைத்து விடும். தற்காலத்தில் ஒழுக்கக் கேட்டால் ஏற்படும் நோய் மனித வாழ்வை அழிப்பது கண்டு பலர் அறிவுரை நிலையிற் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

ஆணும் பெண்ணும் அன்போடு இணைந்து வாழும் இல்லற வாழ்க்கையில் ஆணுடைய ஒழுக்கச் சீர்கேட்டால் ஏற்படும் சிக்கல் நிலைகளைப் பண்டைய இலக்கியங்கள் எடுத்து இயம்பியுள்ளன. "பிறர்மனை நயவாமை" எனப் பெயரிட்டு ஆணை வழிப்படுத்துகின்றன. பலரறிய, நாடறிய நன்மணம் செய்துவாழும் பண்பட்ட வாழ்க்கையொன்று தமிழரிடையே நீண்டநெடுங் காலமாக நிலவி வந்தது. அந்த வாழ்வின் சீர்மையை ஒழுக்கச் சீர்கேடு சிதைத்துவிடும். எனவே அத்தகையதொரு நிலை ஏற்படாமல் மனிதனைக் காக்க என்ன வழி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நாள் பார்த்துப் பலருமறியப் பறையறைந்து மணம் செய்யும் ஆண்மகன் ஒழுக்கம் தவறுவது ஏன்? என்ற வினாவை இலக்கியங்களும் நன்கு ஆராய்ந்துள்ளன. வீட்டிலே காவல்பூண்ட மெல்லிய இயல்புடைய காதல் மனைவியிருக்க ஒருவன் பிறபெண்ணைக் காதலித்து நோக்குவது ஏன்? இன்றுவரை இந்நிலையிலே உலகெங்குமே ஒழுக்கச் சீர்கேடு தோன்றியுள்ளது. இந்த ஒழுக்கச் சீர்கேடு மனிதனை மனிதப் பண்பு நிலையிலிருந்து வழுவச் செய்கிறது.

அயன் மனையிலுள்ளார் பழிதூற்ற, தன்னுடைய உற்றார் தனக்குவரும் இடும்பைக்கு இரங்கி அஞ்சி நிற்கப் பிற பெண்ணை மருவி மயக்கமுறுபவன், நிலையில்லாத நெஞ்சினையுடையவன். அவனுடைய நிலை பாம்பின் தலையை நக்கி இன்புறுவது போன்றது. பாம்புடன் பழகும் ஒருவனுக்குக் கேடுவருதல் உறுதி. காமவயப்பட்டவன் செயற்பாட்டைச் சிறந்ததொரு உவமை மூலம் நாலடியார் விளக்கியுள்ளது. அதேவேளையில் இல்லறத்தைச் செய்ய வேண்டிய ஆண்மகனின் இழிநிலையையும் எடுத்துக்காட்டி யுள்ளது. இது உலகம் அறியப் பாடலாக உயர்ந்து நிற்கிறது.

"அம்பல் அயலெடுப்ப அஞ்சித் தமர் பரீஇ
வம்பவன் பெண் மரீ இ மைந்துற்று - நம்பும்
நிலைமையில் நெஞ்சத்தான் துப்புரவு பாம்பின்
தலைநக்கி அன்னது உடைத்து."

(நாலடியார்: 87)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35

## கொடுத்தாள் எனப்படும் சொல்

வாழ்க்கையில் பலர் புகழ வாழவேண்டும் என்பது பலருடைய விருப்பாக உள்ளது. எல்லோரும் எம்மைப் பற்றிப் பேச வேண்டும். அதன் மூலம் எம்முடைய பெயர் உலகெங்குமே ஒலிக்க வேண்டும் என நினைப்பவருக்கு அந்த நினைப்பை நிறைவேற்ற ஒரு வழியுண்டு.

அதற்குக் கொடை செய்ய வேண்டும். ஈகையினால் ஒருவர் அடையும் புகழ் இந்த உலகிற்கு மட்டுமல்ல மூன்று உலகிற்கும் பரவும் தன்மையது. இதனை வள்ளுவர் "ஈத்துவக்கும் இன்பம்" என்றார். கொடையாளி கொடை செய்வதன்மூலம் அடையும் மனநிறைவு இன்பந்தரும். ஆனால், கொடையாளி பிறரால் புகழப்படும்போது எல்லையற்ற இன்பத்தை அடைவான். ஒருவனுக்கு உயர்ந்த புகழ் கிடைத்தால் அது அழியாது. அவன் பெயரையும் அழியாது நிலைத்து நிற்கச் செய்யும்.

இத்தகைய கொடையால் வரும் புகழ் எங்கெல்லாம் எவ்வாறு பரவுகிறது என்று முன்னோர் விளக்கிக் கூறியுள்ளனர். புகழின் ஒலியாற்றலைப் பிற ஒலியாற்றல்களோடு இணைத்துக் கூறுவதன்மூலம் அதன் பெருஞ்சிறப்பை உணர்த்தியுள்ளனர். ஒலியை உண்டாக்குவதற்காகத் தோல் போர்த்து வரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்ட பேர் ஒலியையுடைய முரசினுடைய ஒலி காதவழியிலுள்ளவர்களுக்குக் கேட்கும். வானில் இடிக்கும் இடியின் ஒலி நான்கு காத வழியிலுள்ளவர்களுக்குக் கேட்கும். ஆனால், சான்றோரால் இன்னார் இன்னது கொடுத்தார் என்னும் புகழ்மொழியின் ஒலி பூமி, அந்தரம், சொர்க்கம் என அடுக்கப்பட்ட மூவுலகும் கேட்கும் தன்மையது. மனிதன் வாழும் உலகத்திலும், அவன் வழியிலுள்ளோர் வாழும் பிதிர் உலகத்திலும், அவன் பெற இருக்கும் சுவர்க்க உலகத்திலும் கேட்கும்.

மூன்று உலகில் வாழ்பவரும் கொடையாளியின் புகழ் கேட்கும் நிலை என்பது "சர்வதேச நிலை" என நாம் விரும்பும் பரந்த நிலையைவிட மிகப்பரந்ததொரு நிலையாகும். புகழின் பெருமையை இவ்வாறு உணர்துவதன்மூலம் புலவர் மனிதனைக் கொடை செய்யத்தூண்டினர். கொடையால் புகழ்கிடைக்கும். அதனால் மறுமையிலும் மகிழ்வடையலாம். மகிழ்ச்சியாகக் குளிர்ந்த சொற்களுடன் தனக்கியன்ற கொடை செய்வதே உலகப் புகழ்பெறச் சிறந்த வழியாகும்.

"கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்

இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்

அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்

கொடுத்தார் எனப்படுஞ் சொல்"

(நாலடியார்: 100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36

# புற்பனிப் பற்று விட்டாங்கு

மனிதன் தன்னுடைய வாழ்நாளில் சில வேளைகளில் நெறி தவறிப் போகக் கூடும். அறிவின்மையால் தீய நெறியிலே ஒழுகக்கூடும். அத்தகைய மனிதனை இனங்கண்டு நன்னெறிப் படுத்துவது எப்படி எனப் பழைய இலக்கியங்கள் வழி கூறுகின்றன. கல்வியறிவு பெற்றநிலையிலும் தீய நெறியிலே செல்பவரை மீண்டும் நன்னெறிப்படுத்த வேண்டுமாயின் நன்னெறியறிந்த நல்லவர்களோடு சேரச்செய்தல் வேண்டும்.

இயற்கைநிலையிலே பசுமையான புல்லைப் பனி பற்றி மூடி நிற்கும். புல்லின் பசுமை மறைந்துவிடும். புல்லின் இயல்பான தோற்றம் மீண்டும் பார்வையிற்பட இயற்கையே துணை செய்கின்றது. இரவில் பனியால் மூடப்பட்ட புல் காலையில் கதிரவன் கதிர்கள் பட்டுப் பனிகரைய மீண்டும் பசுமையாகத் தோன்றும். இக்காட்சியைப் புலவர் மனித வாழ்வியலிற் பொருத்திக் காட்டியது இன்றும் பயன் தருவதாயுள்ளது.

கெட்டவர்களோடு சேர்ந்து அறிவு கெட்டுத் தீச்செயல் புரிபவனைத் திருத்துவதற்கு இந்த இயற்கைக் காட்சிதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை தருகிறது. நல்லினத்தவரோடு அவனைச் சேர்த்துவிட்டால் அவர்கள் அவனை நல் வழிப்படுத்துவர். அறியாத காலத்திலே அடக்கமில்லாதவரோடு இணங்கி நின்று நெறியல்லாத செயல்களைச் செய்தவனுடைய பாவங்களைத் தீர்க்க நெறியறிந்த நல்லோர் உதவுவர்.

புல்லைப் பற்றிய பனி வெயிலின் மிகுதியால் கரைந்து நீங்கிவிடும். அதுபோலவே நெறியல்லாதவனுடைய பாவச் செயல்கள் நல்லினத்தைச் சாந்தவருடைய வழிப்படுத்தலால் கெட்டுவிடும். தீநெறிச் செல்பவரைத் தெருட்டித் திருத்த வேண்டும். அதிலும் அறிவுடையோர் தீநெறியிலே செல்வதைத் தடுக்காவிடின் சமூகம் சீர்கெட்டுவிடும். ஒரு சமூகத்திற் சில அடக்கமில்லாதவர் அறிவுடையோரைப் பற்றி நின்று தீய நெறியிலே இழுத்துச் செல்வர். இந்நிலையிலே அறிவுடையோர் பனியால் மூடப்பட்ட புல்போல இருப்பர். வெயிலின் வெம்மைபோல அவரைக் கரையப்பண்ணி மீண்டும் சமூகத்திற்குப் பயனுள்ளவராக மாற்றவேண்டும். இதனை நாலடிப்பாடல் ஒன்று தெளிவுபடுத்தியுள்ளது.

"அறியாப் பருவத்து அடங்காரோடு ஒன்றி
நெறியல்ல செய்தொழுகி அவ்வு(ம்) - நெறியறிந்த
நற்சார்வு சாரக்கெடுமே வெயின் முறுகப்
புற் பனிப் பற்றுவிட் டாங்கு."

(நாலடியார்: 171)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37

## வைததை உள்ளி விடும்

மக்களின் குணவியல்புகள் பற்றிப் பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இழிகுணம் உடையவரை இனங்கண்டு அவரையும் நல்வழிப்படுத்த வேண்டும். சமூகச் செல்நெறியைச் சிதைக்கும் கயவரைப் பற்றிப் பல நூல்கள் குறிப்பிட்டுள்ளன. குறிப்பாகச் சமூகமட்டத்தில் மக்களைக் குணவியல்புகளின் அடிப்படையில் பாகுபாடு செய்யும் முயற்சியும் நடை பெற்றுள்ளது.

மலையிலே வாழ்க்கை நடத்தும் குறவன் மலையின் நலத்தைப் பற்றியே எந்நேரமும் எண்ணிக் கொண்டிருப்பான். மலை தரும் வளம் அவன் வாழ்வுக்கு வளம் தருவது. அதனால் அவன் எண்ணம் முழுவதும் அதுபற்றியதாகவே இருக்கும். உழவுத்தொழில் செய்து வாழும் உழவன் தனக்குப் பயன்தரும் விளைநிலத்தையே கருதியிருப்பான்.

சான்றோர்கள் தமக்கு ஒருவர் செய்த நன்றியை என்றும் மனத்தில் வைத்திருப்பர். அவர்கள் தமக்குச் செய்த தீமைகளை மறந்து விடுவர். ஆனால், கயமைக் குணம் படைத்தவரோ தன்னை ஒருவர் தெரியாமல் வைததையே எண்ணியெண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்மீது ஆறாத சினங் கொண்டிருப்பர். அவர் தனக்குச் செய்த நன்மைகளை ஒருபோதும் மீள நினைத்துப் பார்க்கமாட்டார்கள்.

உலகத்தில் இத்தகைய கயவர்களையும் நல்லவர்களாக்க வேண்டும். பிறரது பழிப்புரையையே எண்ணிப் பகைமை பாராட்டி வாழும் கயவரால் தீமையே விளையும். ஒருவர் எமக்குத் தீங்கு செய்யும்போது நாம் அவர் எமக்கு முன்னர் செய்த நன்மைகளை எண்ணிப்பார்க்க வேண்டும். வள்ளுவப் பெருந்தகை இப்பண்பு நலனை ஈரடிகளால் எடுத்துக் கூறியுள்ளார்.

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த

ஒன்றுநன் றுள்ளக் கெடும்." (குறள்:109)

கயவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தீய செயல்களையே செய்து காலத்தைக் கழிப்பர். தாம் வாழும் சூழலை எண்ணிப் பார்க்கும் பண்பு அவர்களிடம் இல்லை. கல்வியறிவுடை யவராக இருந்தாலும் கயவருக்கு அறிவு உண்டாகாது. இவர்கள் எவ்வளவு நூல்களைக் கற்றாலும் மனப்பக்குவம் அடையமாட்டார்கள். பட்டம் பதவி பெற்று சமூகத்திலே நடமாடும் கயவர்களை வழிப்படுத்த வேண்டியுள்ளது. கயவர்கள் நன்றி பற்றிய உணர்வில்லாது செயற்படுந் தன்மை யுடையவர். எளியவர்க்கு எவ்வித உதவியும் செய்ய மாட்டார்கள். அவர்களால் சமூகம் எவ்வித பயனையும் அடையமுடியாது. அவர்களை இனம் கண்டு ஏற்றபடி நாம் ஒழுகுவதற்கு நாலடியார் நல்வழி காட்டுகிறது.

"மலைநலம் உள்ளும் குறவன், பயந்த
விளைநிலம் உள்ளும் உழவன் சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை உள்ளி விடும்."

(நாலடியார்: 356)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38

## எய்தியக் கண்ணும் பிறர்க்கு

மனிதனுடைய பிறப்புச் சூழல் அவனுடைய குணவியல்புகளை மாற்றிவிடும். அதனால் மனிதனுடைய குடிப்பிறப்புப் பற்றி முன்னோர் சில கருத்துக்களை முன் வைத்துள்ளனர். மக்கள் கூட்டமாக வாழும் நிலையில் ஒருவரோடொருவர் இயைபுற்று வாழ்வர். அதனால் அவர்களிடையே ஒற்றுமையான சூழ்நிலை இருக்கும். நீண்ட காலம் ஒன்றுபட்டு வாழ்க்கை நடத்தும்போது அவர்கள் குடியிருப்பு மதிக்கப்படும். "பழங்குடிகள்" எனச் சிறப்புப் பெற்று வாழும் நிலை ஏற்படும். இத்தகைய பழங்குடிகளின் பண்புநலன்களைப் பண்டைய இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

பதுமனார் என்னும் உரையாசிரியர் "உயர்குடி" எத்தகையது என்பதை வருமாறு விளக்கியுள்ளார்.

> முன்னோரால் வகுக்கப்பட்ட வருண நாலுக்கு முட்பட்டு மண்ணுமக்களும் தோன்றின நாள்முதலாக வரும் செல்வமும் அதனால் உளதாகிய குடிப்பெயரு முடையதாய் அதற்கனுபவமாய் வரும் கோத்திரமும் மனையு மோரிடமாகவு முடைத்தாய்க் குலவறமும் ஆசாரவறமும் இடையீடுபடாத வொழுக்கமும் உடையது உயர்குடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்குடியிற் பிறந்தவரை வள்ளுவர் தனது குறளில் வருமாறு விளக்கிக்காட்டுகிறார்.

"ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந்தார்." (குறள்: 952)

நல்ல குடியைச் சேர்ந்த ஒருவரை இனங்காட்ட மூன்று பண்புகளை வள்ளுவர் கூறியுள்ளார். குடிப்பிறந்தார் சில கொள்கைகளைக் கொண்டிருப்பர். அருள், அன்பு, அடக்கம், வாய்மை, இன்சொல், பொய்யுரையாமை, குரவரைப்பேணுதல் என அவற்றைக் கூறலாம். எனவே, நல்ல குடியிற் பிறந்தவரை இனம்காட்டச் சில வரையறைகளையும் எம் மூத்தோர் செய்திருந்தமையை உணரமுடிகிறது.

மனிதனுடைய வாழ்வியல் அவனை மட்டும் உயர்த்தாது. அவனைச் சார்ந்தோரையும் உயர்த்தி நிற்கும். அவனுடைய பிறப்புச் சூழலிலே மூன்று பண்புகள் அடித்தளமாக அமையின் அவன் குடி உயர்குடியெனச் சிறப்புப் பெறும். இப்பண்புளை நாலடியார் சான்றாண்மை, சாயல், ஒழுக்கம் என வரிசைப் படுத்திக் கூறுகிறது. இப்பண்புகள் உயர்குடியிற் பிறந்தவரிடமே செறிந்து இருக்கும். பெருஞ்செல்வம் படைத்தவராக இருப்பினும் இக்குணநலன்கள் அற்றவர் உயர்ந்தோராகக் கருதப்பட மாட்டார்கள்.

"சாயல்" என்பது ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பலவகையான மென்மைகளையும் உணர்த்தும் சொல் என்பர் நச்சினார்க்கினியர். இக்காலத்தில் நடை, உடை, பாவனை என வழக்கிலுள்ள மூன்றியல்புகளையும் இச்சொல் ஒன்றாய் உணர்த்துகிறது. நாலடிப்பாடலில் இச்சொல் பொருள்நிலையில் தெளிவாயுள்ளது.

"சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவை மூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க்கு அல்லது வான்றோயும்
மை தவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு."

(நாலடியார்: 142)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39

## கையற்ற போதே அறும்

ஒரு சமூகத்தில் ஒழுக்கம் பேணப்பட வேண்டும். உலகெங்கும் வாழும் மக்களின் ஒழுங்கான வாழ்வியலின் போக்கைச் சீர்குலைக்கும் காரணிகளில் ஒழுக்கச் சீர்கேடும் ஒன்றாகும். நமது முன்னோர்கள் இவ்விடயத்தில் மிகுந்த கவனம் உடையவர்களாய் இருந்தனர். ஒழுக்கத்தைப் பற்றி வள்ளுவர் தமது நூலில் வருமாறு கூறியுள்ளார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்."

ஒழுக்கத்தை உயிரைவிட மேலானதாகப் பேணவேண்டும். ஆனால், மனித சமூகத்தில் ஒழுக்கம் பற்றிய சிந்தனை தற்போது குறைந்து விட்டது. பொருள்வளம் தேடும் ஆர்வமும் காம இன்பத்தை நயக்கும் பண்பும் மக்களிடையே தோன்றியபோது பண்டைய தமிழ் இலக்கியங்கள் அவற்றைக் களையப் பணி செய்தன. மனிதனின் சிந்தனை தீயவழியே செல்லாது நல்வழியிலே செல்ல வேண்டுமென எண்ணின.

சான்றோர், பெண்கள்மேல் காமுற்றுப் பொருளையும் மதிப்பையும் இழக்கும் ஆண்களைத் திருத்த முயன்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் வளம் நோக்கி நல்லவர், தீயர் என்ற பாகுபாடு இன்றி எல்லோரிடமும் உடம்பைக் கொடுத்துப் பணம் தேடும் பொதுமகளிர் பற்றிப் பலபாடல்களை அறிவூட்டல் நிலையிலே பாடியுள்ளனர். அறிவூட்டும்போது மனதிலே நன்கு பதியும் வண்ணம் பாடுவதும் மரபாயிருந்தது.

இலக்கியங்கள் அவ்வாறு பாடுவதற்குப் பொதுமகளிர் காரணமாக இருந்தனர். நற்குணமற்ற அழகிய பெண்கள் பொருள் கொடுப்பவர்க்குத் தமது உடம்பைக் கொடுத்தனர். இத்தகைய பெண்களைப் பற்றிப் "பொதுமகளிர்" எனக் குறிப்பிட்டு முன்னோர் பாடல்களை இயற்றியுள்ளனர். விளக்கினுடைய ஒளி நெய்யில்லாவிட்டால் அற்றுவிடும். அதுபோல வேசியர் கொள்ளும் நட்பும் காணப்படுகிறது. பொருள் வளமில்லாதவரிடம் வேசியர் நட்புக்கொள்ள மாட்டார்கள்.

கையிலே பொருள் உள்ளபோது பொதுமகளிர் அன்பு பாராட்டி வாழ்வர். பொருளைப் பெறுவதற்காக அன்பு பாராட்டுவர். உள்ளன்பு அவர்களுக்குக் கிடையாது. இதை உணராத ஆண்கள் பலர் பொதுமகளிரின் பொய்யான அன்பு பாராட்டலை உண்மையென எண்ணி அவர்பின் செல்வர். நெய்யிட்டபோது விளக்கு நல்லொளி தரும். பணம் கொடுப்பின் வேசையர் நட்புப்பாராட்டுவர். இதனால் விளக்கின் ஒளியும் வேசியர் நட்பும் குற்றமற ஆராய்ந்து பார்க்கும்போது வேறுபட்டன அல்ல. இன்றுவரை உலகெங்கும் இந்நிலையே காணப்படுகின்றது. மனிதசமூகத்தில் இத்தகைய ஒழுக்கம் களையப்பட வேண்டும்.

"விளக்கொளியும் வேசியர் நட்பும் இரண்டும்
துளக்கற நாடின்வே றல்ல - விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே அறுமே அவரன்பும்
கையற்ற போதே அறும்."

(நாலடியார்: 371)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40

## மாதர்மேல் வைப்பார் மனம்

பண்டைக் காலந்தொட்டே ஆண்களின் ஒழுக்கச் சீர்கேடு பற்றி இலக்கியப் பதிவுகள் உள்ளன. சங்கப் பாடல்களில் மருதப்பாடல்களென வகைப்படுத்தப்பட்ட பாடல்களில் பரத்தமை ஒழுக்கம் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. சிலம்பு என்னும் முத்தமிழ்க்காப்பியம் விலைமகள் உறவால் ஒரு வீடு மட்டுமல்ல; ஒரு நாடே அவலத்துக்குள்ளானதைப் பதிவு செய்துள்ளது. ஆண்மகனின் செல்வச்செருக்கு அவனை விலைமாதருடன் உறவு கொள்ள வைத்தது.

திருமணம் முடித்து மனைவியோடு குடும்பம் நடத்தும் ஆடவன் ஆடல்மகளிரின் இருப்பிடம் சென்று பொருள் கொடுத்து இன்பம் துய்ப்பதற்குச் சமூகம் அங்கீகாரம் வழங்கியிருந்தது. பரத்தமை உறவால் குடும்ப வாழ்க்கை சிதைவதைப்பற்றி ஆண்கள் கவலைப்படவில்லை. கட்டிய மனைவியையும் பெற்றெடுத்த மக்கட்செல்வங்களையும் மறந்து வாழ முற்பட்டனர். தமது இன்பவாழ்வு ஒன்றையே கருத்திற்கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நிலையில் அறநீதி நூல்கள் தோன்றி பரத்தமை ஒழுக்கத்தை நீக்க மக்களுக்கு அறிவுரைகளை வழங்கின. திருக்குறள் "வரைவின் மகளிர்" எனும் பகுதியில் பரத்தமை பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறியுள்ளது. பொருளை விரும்பும் பொதுமகளிரைத் தழுவுதல் பொய் யானது. இருட்டறையிலே ஒரு பிணத்தைத் தழுவுவதற்கு ஒப்பானது என வள்ளுவர் இழித்துக் கூறியுள்ளார்.

ஔவையார் பிறபெண்களை நாடிச்செல்லும் ஆண்களைப் பிறிதொரு வகையில் ஆற்றுப்படுத்துகிறார். இயற்கைநிலையிலே சிலவற்றின் அழிவுக்கு அவற்றின் கருவே காரணமாக அமைவதை எடுத்துக்காட்டி, அதுபோலவே ஆண்களின் பரத்தமையால் அவர்களுக்கு ஏற்படும் அழிவுகளைச் சுட்டிக்காட்டுகிறார். நண்டு, சிப்பி, மூங்கில், வாழை என்பன தாம் அழியும் காலத்தில் உள்ளே கொண்ட கருக்களை ஈனுந்தன்மையுடையன. அதுபோல ஆண்கள் தம்முடைய ஞானம், செல்வம், வித்தை என்பன அழியும் காலத்திலே பிற பெண்கள்மீது தகாத ஆசை கொள்வார்கள் என ஔவையார் தனது பாடலிற் பதிவுசெய்து வைத்துள்ளார். பிற பெண்கள்மேல் ஆசை கொள்ளும் ஆண்கள் தம் நிலையை மறந்து செயற்படுவர். பொய், களவு, காமம் போன்ற பாவச் செயல்களிலே கூசாமல் ஈடுபடுவர். அவ்வேளையில் தம்முடைய கல்வியறி வையோ ஞானத்தையோ பயன்படுத் தாமல் மனக்கட்டுப்பாடின்றி நடப்பர். தம்முடைய செல்வம் முழுவதையும்கூட இழந்து விடுவர். இந்நிலை சமூகத்தின் கட்டுக்கோப்பைக் குலைக்கும்.

இக்கருத்தை ஔவையார் பெண்ணை அழைத்துக் கூறுவதுபோலப் பாடலிலே அமைத்துள்ளார். நான்கடிப் பாடலில் அறிவுரையாக அமைந்துள்ளது.

"நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல் - ஒண்தொடி
போதம் தனம் கல்வி போன்ற வரும் காலம் அயல்
மாதர்மேல் வைப்பார் மனம்."

(நல்வழி : 36)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41

# கண்டு கலுழுமே கண்

இன்று சமூகத்தின் செல்நெறியைச் செம்மைப் படுத்தவெனப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மேலைத்தேய உளவள அறிஞர் தம் அறிவுரை களை மக்களுக்கு எடுத்துக்கூறும் வழிகாட்டல் நிலையும் மேற்கொள்ளப்படுகின்றது. பிறமொழி யின் செல்வாக்கும் பண்பாட்டுப் பரம்பலும் மக்களது வாழ் வியலின் அடித் தளங்களை அசைத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் நமது முன்னோரின் அறிவுரைகளைத் தேடிச் சென்று பயன்பெறுவதே நல்லது.

மக்களை நன்னெறிப்படுத்தும் நோக்குடன் பலர் பாடல்களைப் பாடியுள்ளனர். அறிவூட்டற் கருத்துகளை நான்கடி வெண்பாக்களிற் பொதிந்து வைத்துள்ளனர். அவற்றைப் படித்துப் பார்க்கும்போது சமூகத்தில் அவர் களுக்கு இருந்த கவனம் நன்கு புலப்படுகின்றது.

வயதிற் பெரியவர்கள் இளையோரது நலன் பெருக உழைப்பவர்கள். எனவே, இளையவர்கள் அவர்களை அணுகி அறிவூட்டலைப் பெற்றுக்கொள்ளவேண்டும். பெரியவர் களை எப்படி இனங்காண்பது? அதற்கு நன்னெறிப் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று வழி காட்டுகிறது. 32 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த சிவப்பிரகாச சுவாமிகள் "நன்னெறி" என்னும் நூலை இயற்றியுள்ளார். 40 பாடல்களில் மனித வாழ்வினை நெறிப்படுத்த அரிய கருத்துக்களைக் கூறியுள்ளார். சொல்லும் பொருள் தெளிவுறப் பல உவமைகளைக் கொண்டு விளக்கியுள்ளார்.

ஒருவனுடைய உடலிற் பிணியால் வருந்தும் பிற உறுப்புக்களைப் பார்த்துக் கண்கள் அழும். உயர்ந்த குணமுடைய பெரியவர்கள் மறற்வர்களுடைய நோயுற்ற நிலையைக் கண்டு தாமே நோயுற்றது போல, நெருப்பிலே இட்ட நெய் உருகுவது போல உள்ளம் உருகிநிற்பார்கள். நெருப்பின் வெம்மை உடனடியாக உறைந்திருக்கும் நெய்யை உருகச்செய்து விடும். பிறர் துயர்கண்டு மனம் உடனே இரங்க உதவி செய்யும் பண்புடையார் பெரியாராவர்.

இத்தகைய அன்புநிலை அனைவரிடமும் இருக்க வேண்டும். உள்ளத்தை உறைய விடாமல் அன்பு உருக்கிநிற்கும். வள்ளுவரது குறள் அன்பின் தொழிற்பாட்டை விளக்கிக் கூறுகிறது.

"அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு." (குறள்: 74)

அன்பினால் ஏற்படும் ஆர்வம் பிறருடன் நட்புக் கொள்ளவைக்கும் பிறர்துயர் கண்டு உதவும் உள்ளம் அன்புவயப்பட்டது. அத்தகைய உள்ளமுடையவரே பெரியவர். அவரை நன்னெறிப் பாடல் ஒன்று நயமாய் அறிமுகம் செய்துள்ளது.

"பெரியவர் தம் நோய் போல் பிறர் நோய் கண்டு உள்ளம்
எரியின் இழுது ஆவர் என்க - தெரி இழாய்
மண்ட பிணியால் வருந்தும் பிற உறுப்பைக்
கண்டு கலுழுமே கண்."

(நன்னெறி: 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 42

## மாதர் மனைமாட்சி யாள்

ஒருவனுடைய வாழ்க்கை நலமாக அமையவேண்டு மானால் அவனுக்கு ஒரு நலமான துணை வேண்டும். வள்ளுவர் 'வாழ்க்கைத்துணை நலம்' என ஓர் அதிகாரம் அமைத்து 10 குறளில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். குறளுக்கு உரை எழுதிய மணக்குடவர் 'வாழ்க்கைத் துணை நலமாவது வாழ்க்கைக்குத் துணையாகிய மனையானது பெண்மை இலக்கணம் கூறுதல்.' என விளக்கியுள்ளார். கருவில் உருவாகிய நாள் தொட்டுத் திருமணமாகும் வரை மனிதனுக்குத் தாயே உற்ற துணையாக இருக்கின்றாள். திருமணமான பின்னர் மனைவியே அவனுடைய இல்வாழ்க்கைக்கு நலமான துணையாக இருக்கிறாள். 'தாய்க்குப்பின் தாரம்' என்ற முதுமொழியும் இதனை விளக்கவே எழுந்துள்ளது.

மனிதவாழ்க்கையில் நான்கு கடமைகள் சிறப்பாக நிறைவேற்றப்பட வேண்டியவை. துறவிகளைப் பேணுதல், விருந்தினரைப்பேணல், சுற்றம் தழுவி நடத்தல், வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்தல் என அவற்றை முன்னோர் வகுத்துள்ளனர். இக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பு வாழ்க்கைத் துணை நலமான பெண்ணுக்கு வழங்கப்பட்டிருந்தது. இது ஒரு கற்பு நிலையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணப்பட்டுள்ளது. வறுமைக் காலத்தும் மனம் தளராது தன் கடமைகளை நிறைவேற்றுபவளே மனைமாட்சி உடைய வளாகப் போற்றப்பட்டாள். வள்ளுவர் குறள் இதனை வருமாறு கூறுகிறது.

"மனைத்தக்க மாண்புடையள் ஆக்கித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (குறள்: 51)

வாழ்க்கையில் வறுமை வந்தபோது இல்லறக் கடமைகளை நிறைவேற்றப் பெண்தான் துணை நிற்க வல்லவள். ஒரு குடம் நீரில் உணவு சமைத்து உண்ணும் வறுமை நிலையை அடைந்த போதும், கடல்போல் உறவினர் வந்தபோதும் கலங்காது ஏற்றபடி எல்லோரையும் எதிர்கொண்டு வாழும் இயல் புடைய பெண்ணே பெருங் கற்புடையவள். மென்மையான மொழிகளைப் பேசும் இயல்புடைய மனைமாட்சியுடைய பெண் எத்தகைய இடர்வந்தபோதும் குடும்பக் கடமைகளை நிறைவேற்ற உழைக்கும் இயல்புடையவள். இதனை நாலடியார் எடுத்துரைத்துள்ளது.

நிர்வாகத்திறனும், திட்டமிடப்பட்ட செயற்பாடும் கொண்ட பெண்களால் இல்வாழ்க்கை இன்பமான வாழ்க்கையாக அமையும். ஏற்ற பொறுப்பினை எப்போதும் எந்த நிலை ஏற்பட்ட போதும் மனந்தளராமல் சிறப்பாகப் பேணும் பெருங்குண வியல்பே கற்பாகும். இக்கற்புநிலை பெண்ணிடம் தனித்துவமாக இணைந்திருக்கவேண்டும். அப்போதுதான் பெண் தன்னையும் காத்து, தன்னைக் கொண்டவனையும் பேணி, சோர்வடையாமல் சிறந்ததொரு வாழ்க்கைத்துணை நலமாக ஆணுக்குத் 'தாய்க்குப் பின்தார மாக' விளங்க முடியும்.

"குடநீரட்டு உண்ணும் இடுக்கண் பொழுதும்
கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடல் நீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்."

(நாலடி: 382)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43

## காண்டற் கரியதோர் காடு

எல்லோருக்கும் வாழ்க்கை இன்பமானதாக இருக்க வேண்டும் என்பதே இலக்காக உள்ளது. இல்வாழ்க்கையில் ஈடுபடும் அனைவரும் இதனையே எதிர்பார்க்கின்றனர். இது தவறன்று. ஏனெனில், இல்வாழ்க்கைதான் பிறருக்காக வாழும் பயிற்சியைத் தருகின்றது. கணவன், மனைவி, குழந்தை, பெற்றோர், உறவினர், உற்றார், நண்பர் என எல்லோரும் ஒன்றிணைந்து மகிழ்வாக வாழும் நிலை இல்லறத்தால் உருவாகும்.

இத்தகைய சிறப்பான இல்வாழ்க்கை நடைபெறும் இடம் 'இல்லம்' எனப்பட்டது. அதனை நிர்வகிக்கும் பொறுப்பு 'இல்லாள்' என்னும் சிறப்புப் பெயருடன் பெண்ணுக்கு வழங்கப்பட்டது. அவளுடைய திறமையை 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்ற முதுமொழி நன்கு உணர்த்துகிறது. 'தாரம் மாணாதது வாழ்க்கை யன்று' என முதுமொழிக்காஞ்சி என்னும் நூல் சுட்டியுள்ளது.

இல்லத்திற்கு 'மனை' என்றும் ஒரு பெயர் உண்டு. அதற்கு நிலையாக வாழும் இடம் என்று பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தைப் பேணி நிர்வாகம் செய்யும் பெண் 'மனைவி' என்றழைக்கப்பட்டாள். மனைக்கு ஒரு விளக்காக மனைவி விளங்கினாள். அவள் நல்லவளாக வல்லவளாக இருக்க வேண்டும். இல்லறத்தைச் செய்யும் பேராற்றல் பெற்றிருக்க வேண்டும். நல்ல மனைவி மனையை ஆளும் தகுதியுடையவள் ஆனாள்.

மனையாளின் சிறப்பைப் பண்டைய இலக்கியங்கள் சிறப்பாகப் பதிவு செய்துள்ளன. இயற்கை நிலையோடு எடுத்து நோக்கி இல்லாளின் பண்புநலன் பேசப்பட்டுள்ளது. இல்லறம் பேணும் பெண் இல்லாத இடம் மனிதரில்லாக் காடாகி விடும். மிகவுயர்ந்த மாடங்கள் கொண்ட செல்வச் செழிப்புள்ள வீடாக இருந்தாலும், மாட்சியுடைய மனைவி இல்லாவிட்டால் அங்கு சிறப்பான வாழ்வு நடக்காது. பெரிய வீட்டில் எத்தனை ஒளிவிளக்குகளை ஏற்றி வைப்பினும் மனையாள் இல்லாவிட்டால் அங்கு ஒளி இருக்காது. எனவே, ஒருவன் தான் வாழும் மனையில் ஒளிவிளக்காக நின்றுலவும் 'மனையாளை' ப் புறந்தள்ளலாகாது.

மனைக்கு மாட்சிதருபவள் மனைவி. அவளுடைய செயற்பாடுகளைக் கொண்டே மனை அழகுபெறும். இல்லாளை விட்டு விலகி நின்று எந்த அறத்தையும் செய்ய முடியாது. மனிதனின் மகிழ்வான வாழ்க்கைக்கு மனைவியே இன்றியமை யாதவள். அவளே இல்லத்தை ஆளும் இல்லாளாக, பண்பாடு பேணும் பெண்ணாக நின்று ஒளிதருவாள்.

> "மழை திளைக்கும் மாடமாய் மாண்பமைந்த காப்பாய்
> இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னாம் விழைதக்க
> மாண்ட மனையாளை இல்லாதான் இல்லம்
> காண்டற் கரியதோர் காடு."
>
> (நாலடியார்: 361)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44

# கொண்டானைக் கொல்லும் படை

ஆணும் பெண்ணும் திருமணம் செய்து குடும்பமாக வாழுகின்ற வாழ்க்கை இல்வாழ்க்கையெனச் சிறப்பாகப் பேசப்பட்டது. தமிழர் வாழ்வியலில் 'குடும்பம்' என்பது சமூகத்தின் இறுக்கமான கட்டமைக்கு உறுதியான தூணாக விளங்கியுள்ளது. மூன்று தலைமுறைகள் ஒன்றாக இயைபு பட்டு நின்று மகிழ்வாக வாழும் பயில்களமாக விளங்கியதைப் பல இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

குடும்பத்தின் சிறப்பான நிலைக்குப் பெண்ணே காரணம். ஆணுக்கு இல்வாழ்க்கையில் துணையாக இணையும் பெண் அடக்கமும் சுறுசுறுப்பும் அன்பும் உடையவளாக இருக்க வேண்டும். கணவனுக்குச் சினமூட்டி அவன் உயிரை வாங்கும் பெண் 'கூற்றம்' போன்றவள். அவனுக்குக் காலம் அறிந்து உணவிடாமையால் நோயாள னாக்கிவிடுகிறாள். அதனால் அவள் தீராத நோயாகப் 'பிணியாக' விளங்குவாள். சமைத்த உணவைக் கணவனுக்குப் பரிமாறாமல் தான் முன்னே உண்பவள் 'பேய்' போன்றவள் என முன்னோர் கருதியுள்ளனர்.

பெண்ணுடைய கடமைகள் பரநலம் பேணுபவை யாகும். அதிலும் ஆணுடைய செம்மையான வாழ்க்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய நாளாந்தக் கடமைகள் பெரிதும் உதவும். உணவு சமைப்பதும் பரிமாறுவதும் குடும்பத்தவருடைய உடல் நலத்தைப் பேண எனப் பெண்ணிடம் கையளிக்கப்பட்ட பணிகளாகும். கணவனோடு எதிர் நின்று சொல்லாடும் பெண்மையால் அவன் சினம் பெருகும். பொறுமை எல்லைமீறும். வன்முறைச் செயற்பாடுகள் தொடரும் அது குடும்பச் சண்டை என நாள் தோறும் நடைபெறும்.

இன்று சமூகத்தில் பல குடும்பங்களில் இந்நிலை காணப்படுகிறது. அதனால் கொண்டவன் மட்டுமல்லக் குழந்தைகளும் பெரிதும் இடர்ப்படுகின்றனர். அன்பும், அரவணைப்பும், பரிவும் கொண்ட பெண்மையின் இயல்புக்கு முரணான குணவியல்பைக் களையவேண்டும் என்பதே புலமைச் சான்றோரின் இலக்காக இருந்தது. சமூகத்தின் செல்நெறியைச் சீர் செய்யப் பெண்மைதான் ஏற்றது. ஆனால் அப்பெண்மையே மாறுபட்டால் என்ன செய்வது? எனவே பண்டைய இலக்கியங்கள் பெண்மையின் முரண்பட்ட குணவியல்பைக் களைய வேண்டிப் பல பாடல்களை யாத்துள்ளன.

'நாலடியார்' இப்பணியைச் சிறப்பாக மேற்கொண் டுள்ளது. சிறிது நேரம் அடுக்களையில் பெண் செய்யும் அருமையான பணி அனைவரையும் காக்கும் உன்னதமான பணி. தன்னோடு வாழ்வில் இணைந்த ஆணை உருவாக்கும் பெண் மாறுபடக் கூடாது என நல்லுரையாய்ப் பாடல் ஒன்றைத் தந்துள்ளது.

"எறியென்று எதிர்நிற்பாள் கூற்றம்; சிறு காலை
அட்டில் புகாதாள் அரும்பிணி - அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை."

(நாலடியார்: 363)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45

# மகனறி தந்தை அறிவு

இந்த உலகத்தில் அறிவுடையாரைக் காண்பது எப்படி? - என்ற வினா பலருடைய உள்ளத்தில் உறைந்து கிடக்கின்றது. அறிவுடையவரை இனங்காண வள்ளுவர் வழிகாட்டி யுள்ளார்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்

என்னுடைய ரேனும் இலர்" (குறள்: 430)

எல்லாச் செல்வங்களையும் அறிவினாலே தேடிக்கொள்ள முடியும். அதனால் அறிவை நாம் தேடுவது இன்றியமை யாதது. அறிவின்மையே பல தீமைகளைச் செய்யத் தூண்டுகிறது. கல்வி ஒருவருக்கு அறிவைத்தரும். நாம் வாழுங்காலத்தில் அநுபவத்தினால் பலவற்றை அறியலாம். ஆனால், எமது முன்னோரது காலத்தை அறிவதற்குக் கல்வியே துணைநிற்கும்.

நூல்களைக் கற்பதன்மூலம் முற்கால விடயங்களை அறியலாம். ஆனால் அதற்கு ஒரு ஆசிரியருடைய உதவி தேவை. அவரது கற்பித்தல், விளக்கநிலையை ஏற்படுத்தி அறிவைக் கூர்மையாக்கும். எனினும் ஆசிரியருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு ஏற்படுவதற்கு முன்னரேயே அறிவைப்பெறும் வாய்ப்பு மனிதனுக்கு உண்டு.

இயற்கை நிலையிற் பண்பட்ட ஒரு நிலத்தில் செந்நெல்லின் வளமையான முளையே செந்நெல்லாக விளையும் தன்மை எல்லோராலும் அறியப்பட்ட தொன்று. விதை நெல்லிலிருந்து நெற்செடி முளைத்துக் கதிரை ஈனும். கதிர்கள் வயல் நிறையக் காய்க்கும். இதுபோலவே ஒரு குடும்பத்தில் தந்தை அறிவுடையவராக இருந்தால் பிள்ளைகளும் அறிவுடையவராக விளங்குவர். தந்தை நன்னெறியில் ஒழுகின் பிள்ளைகளும் அத்தன்மை உடைய வராக இருப்பர். இது இயற்கையென முன்னோர் கூறியு ள்ளனர்.

மகனைக் காணும் போது தந்தையின் நலத்தை அறியலாம் என 'நான்மணிக்கடிகை' என்னும் நூல் கூறுகிறது. தம்முடைய உருவைக் கண்ணாடியிலே பார்த்து அறிவது போல மகனின் முகத்திலே தந்தையின் நிலையை அறிந்து கொள்ளலாமெனப் "பழமொழிநானூறு" என்னும் நூல் விளக்கியுள்ளது.

குடும்பத்தில் தந்தையின் அறிவுடைமை குழந்தைகளைச் சாரும்போது அக்குடும்பம் முழுமையும் அறிவுடையோராய் இருக்க வாய்ப்பு உண்டாகும். தந்தை மகனுக்கு அறிவூட்ட; அதனை அவன் தன் மகனுக்குக் கொடுக்க; தலைமுறை தலைமுறையாய் அறிவுடையோர் உருவாகுவர். அந்த அறிவுடையாரை அறிமுகம் செய்யும் நாலடிப் பாடல் வருமாறு:

"செந்நெல்லா லாய செழுமுளை மற்றும் அச்
செந்நெல்லே ஆகி விளைதலால் - அந்நெல்
வயல் நிறையக் காய்க்கும் வளவயல் ஊர!
மகனறி தந்தை அறிவு."

(நாலடியார்: 367)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46

## பூவின் கிழத்தி புலந்து

மக்களிடையே அறிவின்மை காரணமாகப் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. தம்மைச் சூழ உள்ளவற்றைப் பற்றி அறிய முடியாத நிலையிற் பலருளர். எமது முன்னோர் அறிவையும் செல்வத்தையும் விளக்குவதற்கு இரு தெய்வங்களாக அவற்றை உருவகப்படுத்தியுள்ளனர். நாவில் வீற்றிருக்கும் மகளாகச், சரஸ்வதி; அறிவின் தெய்வமாக வழிபடப்பட்டாள். தாமரைப்பூவில் வீற்றிருக்கும் இலக்குமி செல்வத்தின் தெய்வமாக வழிபடப்பட்டாள். நாமகள், பூமகள் எனச் சிறப்பாக இத் தெய்வங்களை அழைத்தனர்.

இன்று இக்கருத்தைச் சிலர் ஏற்கத்தயங்குவர். ஆனால், அறிவும் செல்வமும் சேராதிருப்போர் மனதிற் குழப்பம் இருப்பதை நன்குணர்ந்த நமது முன்னோர்; இவ்வாறு இரு பெண் தெய்வங்களைக் கருத்து நிலையிற் காட்டி மக்களைத் தெளிவு படுத்த முயன்றனர். அறிஞராயிருப்பவர் வறுமையில் உழலக் காரணம் என்ன என்பதை விளக்க ஒரு கதையைக் கூறிச் சென்றுள்ளனர்.

பெண்மையின் போட்டியான மனநிலையை முன்வைத்து நாமகள் இருக்குமிடத்திற் பூமகள் சேர்ந்திருக்க விரும்பாள் என்ற ஒரு மனித வாழ்வியல் நிலையின்மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை உணரவைக்க முயன்றுள்ளனர். அறிவு தொல்லை வினைச் சிறப்பால் நம்மிடம் வந்து சேர்வது. எனவே, அது எம்முடன் பிறவி தோறும் தொடர்ந்து வரும் . செல்வத்தை மட்டுமே தேடுபவர் இதனை உணர்வதில்லை என்பதை விளக்க முயன்றுள்ளனர்.

பலநூல்களையும் கற்று அறிந்தவர் சிலவேளைகளில் தமது பெருமை கெட்டுத் துன்புறுவதற்குக் காரணம் இந்த நாமகளும் பூமகளும் ஒரேயிடத்தில் இருக்க விரும்பாமையே. எனவே, அறிஞர் வறியவராவதற்குக் காரணம் ஊழ்வினையே. அதுபற்றி அவரைக் குறை கூறுவது அறிவின்மையாகும். நமது வாழ்வியல்நிலையில் ஒருவனிடம் ஒரு பெண் கூடியிருக்கும் போது வேறொரு பெண் வந்து அவனைக் கூடாது ஊடுவது உலகியல்பாக உள்ளது. அதனையே நாமகள் கூடின இடத் தைப் பூமகள் கூடாது ஊடுவது; என்ற கற்பனைநிலையாக முன்னோர் கொண்டிருந்தனர். இதற்குப் பிறிதொரு கதைமரபும் உண்டு.

மருமகளான நாமகள் இருக்கிமிடத்தில் மாமியாரான பூமகள் ஒருங்கிணைந்து இருக்கமாட்டாள் எனக்கூறும் வாழ்மொழி மரபும் உண்டு.

இன்று தெய்வ நிலையில் நாமகளும் பூமகளும் வழிபடப்படுகின்றனர். எனினும் அறிவின்மை காரணமாகக் கற்பனை நிலையில் மேற்காட்டிய கருத்தை நினைத்து வாழ்வது அறிவின்மையே. உண்மையான அறிவால் எல்லாவற்றையும் நன்கு உணர்ந்து செயற்படவேண்டுமென நாலடிப்பாடலொன்று விளக்கியுள்ளது.

"பல்லான்ற கேள்விப் பயன் உணர்வார் பாடழிந்(து)
அல்லல் உழைப்ப(து) அறிதிரேல் - தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து."

(நாலடியார்: 252)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47

## பச்சோலைக்கு இல்லை ஒலி

மனிதனுடைய பேச்சு அவன் குணவியல்பைக் காட்டும் ஒரு கருவி. மற்றவரோடு நாம் கருத்துப்பகிர்வு செய்யும்போது இக்கருவியைப் பயன்படுத்துகிறோம். ஒருவருடைய அறிவுநிலையையும் அவருடைய பேச்சு வெளிப்படுத்தி விடும். நன்கு கற்றவர்கள் பேசும்போது சொற்சோர்வு தோன்றுமோ என அஞ்சி விரைவாக எதனையும் பேச மாட்டார்கள். சொற்சோர்வு என்பது சொல்லில் தோன்றும் குற்றமாகும். பொய், கோள், கடுஞ்சொல், பயனிலசொலல் என்பன சொற்குற்றமென வரையறை செய்யப்பட்டுள்ளன. ஆனால், சொற்சோர்வுக்கு அஞ்சாதவர் விரைவாகப் பேசும் இயல்பினை உடையவர். தாம் பேசும் சொற்களை, விளைவுகளை எண்ணிப்பாராமற் பயன் படுத்துவர். இத்தகையவர்களை நமது முன்னோர் இயற்கைநிலையில் உவமைமூலம் விளக்கிக்காட்டியுள்ளனர்.

உயர்ந்த பனை மரத்தின் காய்ந்த ஓலை கலகல என்னும் ஒலியுடன் ஆரவாரிக்கும். ஆனால், பச்சை ஓலை எவ்வித ஒலியும் எழுப்பாது ஆரவாரமின்றி அமைதியாய் இருக்கும். அதேபோல அறிவற்றவரும் ஆரவாரம் செய்து பேசுவர். அறிவுடையோர் காலங்கருதி அமைதியாகப் பேசுவர். எம் கண்முன்னே காணும் இருவகை ஓலைகளின் இயல்பை எடுத்துக்காட்டி அறிவையும் அறிவின்மையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபடுத்திக் காட்டும் புலமைப்பாங்கு பல பாடல்களிலே வெளிப்பட்டுள்ளது.

உயர்ந்த ஆழமான கருத்துக்களைச் சிறந்த எளிமையான உவமைகள்மூலம் எடுத்து விளக்குவது ஒரு சிறந்த சமூகக் கடமையாகவுள்ளது. அறிவற்றவரை ஆற்றுப்படுத்துவதற்கு முதலில் அவரை அடையாளம் காணவேண்டும். பின்னரே அறிவுறுத்த வேண்டும். "ஆராய்ந்து பேசுதல்" அறிவின் திறத்தால் வருவது. அறிவுக்கும் அடக்கத்திற்கும் தொடர்புண்டு. "சிற்றறிவுடையோர் சிலுசிலுப்பர்" நீதி வெண்பா கூறுகிறது.

பண்டைய புலவர் மக்களுக்கு அறிவுரை கூறும் பாடல்களை ஒரு தேவைக்காகவே பாடியுள்ளனர். மக்களின் தவறான செயற்பாட்டைச் சுட்டிக்காட்ட மிக எளிமையான உவமை களைக் கையாண்டுள்ளனர். இருவேறுபட்ட அறிவுடையவரை பின்வருமாறு காட்டியுள்ளனர்.

"சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர் நன்றாயமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே!"

(நீதிவெண்பா: 09)

நாலடியார் என்னும் நூலில் பனைமரஓலை கொண்டே அறிவுடையவரையும் அறிவற்றவரையும் ஒலிநிலை வேறுபாடு காட்டிப் புலவர் விளக்கியுள்ளார். இது எல்லா வயதினரையும் நினைத்துச் செயற்பட்டதைக் காட்டுகின்றது. எளிமையான வெண்பாப் பாடல் அமைப்பிலே அரிய கருத்தைப் புலவர்கள் கூறிச் சென்றுள்ளனர். இதற்கு நாலடியார் பாடலே நல்ல சான்றாய் இன்றுவரை நிலவுகின்றது.

"கற்றறிந்தார் நாவினார் சொல்லார் தம் சோர்வஞ்சி
மற்றையவ ராவார் பகர்வர் - பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி."

(நாலடியார்: 256)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48

## எறிபுனந் தீப்பட்டக்கால்

மனிதன் தான் வாழும் காலத்தில் பலரைச் சந்திக்கிறான். சந்திப்புத் தொடர்கையில் நட்பாக வளர்சிறது. அந்த நட்பு அவனுடைய வாழ்வின் செல்நெறிக்குத் துணையாக நிற்கிறது. ஆனால், சிலவேளைகளிற் சிலருடைய தொடர்பு அவர் வாழ்க்கையிற் சிறுமையைச் சேர்த்துவிடும் இயல்புடையது. எனவே, அவன் தொடர்பு கொள்பவரைப் பற்றி விழிப்பாயிருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

நல்லினத்தைச் சேர்ந்து நட்புக்கொள்ள வேண்டும். மனத்திலே குற்றமற்று வாழ்பவர்கள் தீயவர்கள் சேர்க்கையால் மனந்திரிபு அடைவர். மனம் நலமுடையதாக இருந்தால் வாழ்க்கையிற் கேடுகளை எதிர்கொள்ளும் நிலை ஏற்படாது.

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்

எல்லாப் புகழும் தரும்."

என வள்ளுவரும் இந்நிலையை விளக்கியிள்ளார். "கயவரைக் கைகழிந்து வாழ்தலினிதே" என இனியவை நாற்பது என்னும் நூல் இக்கருத்தை மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

நல்லின மக்களைச் சேர்ந்து வாழாமல் தீயவர்களைச் சார்ந்து நட்புக்கொண்டு வாழும்போது ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளைவுகளைப் பற்றிப் பல நீதிநூல்கள் சுட்டிக்காட்டி யுள்ளன. நல்லவரும் தீயவரும் சேர்ந்திருப்பது நன்மைதராது. அதனை நல்லதொரு உவமைமூலம் முன்னோர் கூறிப் போந்துள்ளனர்.

ஒரு காட்டை வெட்டித் தீயிடும்போது அங்கு நின்ற வேங்கைமரமும் சந்தனமரமும் ஒருசேர வேகும். அவற்றின் மணத்தை வேறுபட உணரமுடியாது. காடுவெட்டி நன்னிலமாக்கும்போது எல்லாமரங்களுமே வெட்டப்படும். அதுபோல, தீயவருடன் சேர்ந்த நல்லவரும் அழிய நேரிடும்.

மனத்திலே குற்றமற்ற நல்லவராக இருந்தாலும் தீயவரைச் சேர்ந்திருப்பின் அந்த நல்லவரை எல்லோருமே இகழ்வர். வேங்கை மரத்தை அடுத்து நின்றிருந்தமையால் சந்தன மரத்திற்குக் கேடு வந்தது. அதுபோல தீயவரைச் சேர்ந்தவர் மனம் திரிபுபட்டுக் கெடுவர். நல்லவர் மனத்தையே கெடுக்கும் தீயவர் தொடர்பு எத்துணைத் தீமையானது என்பதை ஓர் இயற்கைநிலையான செயற்பாட் டால் விளக்கியிருப்பது சிறப்பாயுள்ளது.

மனிதனை நெறிப்படுத்தும்வேளைகளை இனங்கண்டு ஆற்றுப்படுத்த வேண்டும். நம்முன்னோர் அதனைச் செம்மையாகச் செய்ததை அவர்கள் இயற்றிய பாடல்களால் இன்று நன்குணரமுடிகிறது. மக்கள் கூட்டாக வாழும் ஒரு சமூக அமைப்பிலே நல்லமனமுடையவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களுடைய மனத்தைக் கெடுக்கும் தீயவர் தொடர்பைத் துண்டித்துவிடவேண்டும். ஒருவரை அவரு டைய இயல்பறிந்து நட்புக்கொள்வதே நலம் தருமென்பதை நாலடியார் சுட்டியுளது.

"மனத்தான் மறுவிலர் ஏனுந்தாஞ் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர் - புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேகுமே
எறிபுனந் தீப்பட்டக் கால்."

(நாலடி: 180)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலம்புரி நாளிதழில் வெளிவந்த பக்தியின் மொழி தமிழ் என்ற ஆக்க இலக்கியம் நூலுருப்பெற்றதைத் தொடர்ந்து வலம்புரி நாளிதழில் அவரால் எழுதப்பட்ட நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்பதும் நூலுருப்பெறுவது போற்றுதற்குரியது. அன்றைய நாளுடன் செய்தியின் காத்திரம் இழந்து போகின்றது என்பது நாளிதழ்களின் வழமையான நினைப்பாக இருக்கின்ற வேளையில், நாளிதழ்களை ஆவணப்படுத்துதல் தவறவிட்ட வற்றைத் தேடிப் பெறுதல் என்ற ஒரு புதுப் பண்பாட்டைப் புகுத்தி நாளிதழ்களின் இருப்பைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு சமகால நாளிதழ்களுக்கு இருக்கின்ற வேளையில், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் வலம்புரியில் எழுதி வருகின்ற ஆக்க இலக்கியங்கள் மேற்குறிப்பிட்ட பணியை வலம்புரி இலகுவாகச் செய்து முடிக்க உதவுகின்றது எனலாம்.

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர், திறனாய்வாளர், உரையாளர், பிறமொழி அறிவாளர் என்ற பல்பரிமாணங்களில் தனது ஆளுமைத் திறத்தைப் பதித்த கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் சமூகப் பொறுப்பும் உடனுக்குடன் ஆவணப்படுத்தும் உத்வேகமும் காலத்தை அறிவியலுக்காக அர்ப்பணிக்கும் அவரின் உயர்ந்த சிந்தனையும் தமிழினம் தொடர்பில் நாம் பெருமைப்படுத்துவதற்குக் காணரமாகின்றன.

ISBN 955989254-1
9789559892540

**நல்லையா விஜயசுந்தரம்**
பிரதம ஆசிரியர், வலம்புரி நாளிதழ்,
யாழ்ப்பாணம்.

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org